பக்கங்கள்: பதினாறு

22 JUL 2004

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 07 வியாழக்கிழமை (22-07-2004)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:240

# சமாதானச் சூழல் இழுத்தடிக்கப்படுகிறது காத்திருக்கப் புலிகள் இயக்கம் தயாரில்லை

## 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் தலைப்புச்செய்தியில் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை22

சமாதானச் சூழல் இழுத்தடிக்கப்படுவதை உணர்ந்தும் முட்டாள் தனமாகக் காத்திருக்கப் புலிகள் இயக்கம் தயாரில்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றது புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை.

'கேள்விக்குறியாக உள்ளது சமாதானத்தின் எதிர்காலம்' என்ற தலைப்புச் செய்தியுடன் நேற்று வெளியான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் (ஜூன்-ஜூலை மாதத்திற்குரிய 117ஆவது இதழ்) தலைப்புச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சந்திரிகா அம்மையாரின் குழப்பகரமான கருத்துக்களும் சிங்கள அரசின் ஸ்திரமின்மையும் ஒன்று சேர்ந்து சமாதானச் சூழலை கேள்விக்குறியாக்கி வருகின்றன. சமாதானப் பேச்சை அர்த்தமுள்ளதாக்கத் தேவையான அரசியல் நடைமுறைகளை புலிகள் இயக்கம் தெளிவாக வரையறுத்து உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளது. கசப்பான கடந்தகால அனுபவங்களை கருத்தில் எடுத்து பேச்சுக்களை இடைநடுவில் குழம்பாவண்ணம் விவேகமான வகையில் அரசியல் நிகழ்ச்சி நிரலை புலிகள் வரைந்து அரசிடம் கையளித்திருந்தனர்.

ஆனால், சந்திரிகா அரசு இதுவரை புலிகளின் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலை ஏற்றுக் கொள்ளவும் இல்லை; முற்றாக நிராகரிக்கவும் இல்லை. அதற்குப் பதிலாக நேரத்திற்கு ஒரு கருத்தைக்கூறி காலத்தைக் கடத்தும் தந்திரத்தையே அது கடைப்பிடித்துவருகிறது.

1994ஆம் ஆண்டு அம்மையார் வெளியிட்ட தீர்வுப் பொதியின் அடிப்படையிலேயே பேச்சு நடத்தப்படவேண்டும் என்று அவர் பொதுக் கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார். இத்துடன் பேச்சுக்களை முன்னெடுக்க ஓர் ஆலோசனைச் சபை வேண்டுமென்று கூறி அதற்கு (16ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை விவகாரத்தில் இந்தியா மீண்டும் தீவிர ஈடுபாடு கொள்ளும்

## இங்கு அமெ., பாக். செல்வாக்கை சமனிலைப்படுத்தும் முயற்சியாம்

புதுடில்லி,ஜூலை22

**இலங்கை விவகாரத்தில் தனது ஈடுபாட்டை மீண்டும் தீவிரப்படுத்துவதற்கு இந்தியா தயாராகி விட்டது. சிக்கல் நிறைந்த பாதுகாப்பு நிலைமைகளுக்காக மட்டுமன்றி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவின் மீது அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் செல்வாக்கு அதிகரித்து வருவதை சமப்படுத்துவதற்காகவும் இம்முறை இந்நடவடிக்கைக்கு இந்தியா தயாராகியிருக்கின்றது என புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.**

'ரைம்ஸ் ஒவ் இந்தியா' இது குறித்துத் தகவல் வெளியிட்டிருக்கின்றது. அது மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த உயர் மட்டக்குழு, இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் சம்பந்தமான விடயங்களை புதுடில்லியில் இறுதி செய்துள்ளது. இந்த ஒப்பந்தம் அடிப்படையில், இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து அதிகளவு இராணுவப் பொருள்களை விநியோகிப்பதை முக்கிய நோக்காகக்கொண்டது.

இலங்கைக்கான கடன் வசதிச் சேவை திட்டத்தை 10 கோடி அமெரிக்க டொலரில் இருந்து 15 கோடி அமெரிக்க டொலராக உயர்த்தும்படி பிரதமர் ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை பரிசீலிக்க இந்தியா இணங்கியுள்ளது.

1987இல் பிரதமர் ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் அரசு மேற்கொண்டு, பின்னர் மோசமாக முடிவுற்ற இலங்கையில் இராணுவப் பிரசன்னம் என்ற நிலைப்பாட்டை, இந்தியா மீண்டும் எடுக்காது என இந்திய அதிகாரிகள் இம்முறை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், அந்த அரசில முன்னர் இருந்த முக்கியமான பிரமுகர்கள் இப்போதும் மீண்டும் புதிய இந்திய அரசுக்குள் வந்திருப்பதை அடுத்து, இலங்கை விடயத்தில் முன்னைய இந்திய அரசுபோல் ஒட்டாமல் செயற்படும் போக்கை விடுத்து இலங்கையோடு இந்தியா நெருங்கிச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தேங்கிய 894 தபால் பொதிகள் விமானம் மூலம் வந்துசேரும்

வவுனியா,ஜூலை22

வவுனியா மாவட்ட அஞ்சல் அலுவலகத்தில் நீண்டகாலமாகத் தேங்கிக் கிடந்த வட பகுதிக்கான தபால் பொதிகளை விமானம் மூலம் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பிவைக்க அஞ்சல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனையடுத்து வவுனியா மாவட்ட அஞ்சல் அலுவலகத்தில் இருந்த இரண்டாயிரத்து 663 பொதிகளில் யாழ்ப்பாணத்துக்குரிய 894 தபால் பொதிகள் நேற்று இரண்டு லொறிகள் மூலம் கொழும்பு பிரதம அஞ்சல் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன என வவுனியா அஞ்சலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதிக்கு அனுப்பப்பட்ட 2 ஆயிரத்து 500 தபால் பொதிகள் கடந்த 10 மாதங்களுக்கு மேலாக வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் தேங்கிக்கிடந்தமை தெரிந்ததே. (எ-8-7-164)

## ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவரான ஆலையடிவேம்புப் பிரதேச சபைத் தலைவர் நேற்று அக்கரைப்பற்றில் சுட்டுக் கொலை!

அம்பாறை,ஜூலை22

ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவரான அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்புப் பிரதேச சபைத் தலைவர் வேலாயுதம் ரவீந்திரன் (கமலன் - வயது-32) நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இப்படுகொலைச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் அக்கரைப்பற்று மத்திய சந்தைப் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று மத்திய சந்தையில் நேற்று நடைபெற்ற சிரமதானப் பணிகளில் பங்குபற்றிக் கொண்டிருந்தபோதே சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றிருக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த பிரதேச சபைத் தலைவர் கமலன் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டபோதே இடையில் மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிளிநொச்சியில்!

### இன்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்காகக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொனபுரூவ் ஹொவ்டே நேற்றுக் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தார். ஹெலி மூலம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி வந்தடைந்த இவரை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் வரவேற்றனர். கிளிநொச்சியில் தங்கியுள்ள அவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இன்று காலை பேச்சு நடத்தவிருக்கின்றார்.

கிழக்குச் சம்பவங்கள் மற்றம் கொழும்பில் நடந்த தற்கொலைத் தாக்குதல் ஆகியன தொடர்பாக அதிருப்தி தெரிவித்துக் கண்காணிப்புக் குழு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அறிக்கை ஒன்றைக் கடந்தவாரம் அனுப்பியிருந்தது. இன்றைய பேச்சில் இந்த விடயம் முக்கிய இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-3)

## சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்கக்கோரி கௌதாரிமுனை மக்கள் நேற்றுப் பேரணி

கிளிநொச்சி,ஜூலை22

சங்குப்பிட்டிப் பாதையை மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்துவிடவேண்டும் என்பது உட்பட 4 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து பூநகரி, கௌதாரிமுனை மக்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

கௌதாரிமுனையில் ஆரம்பமான இந்தப் பேரணி பூநகரிப் பிரதேச செயலகத்தில் முடிவடைந்தது.

சங்குப்பிட்டிப்பாதை திறக்கப்படல் வேண்டும். கௌதாரிமுனை - கல்முனை வீதி திறக்கப்படல் வேண்டும், கௌதாரி முனையில் பனைவளம் அழிக்கப்படுவது நிறுத்தப்படல் வேண்டும், கௌதாரி முனைக் கடற்பரப்பில் இந்திய மீனவர் மீன்பிடிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரி.பி.ஸி. ஒலிபரப்பு அஞ்சல் 4 நாள்களாக இடைநிறுத்தம்

கொழும்பு,ஜூலை22

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் தினசரி ஒரு மணித்தியாலம் ஒலிபரப்பாகி வந்த லண்டன் ரி.பி.ஸி. நிகழ்ச்சி கடந்த நான்கு நாள்களாக அஞ்சல் செய்யப்படவில்லை.

தொழில்நுட்பக் கோளாறே இதற்குக் காரணம் என்றும் -

அவை சீராக்கப்பட்டதும் இந்த அஞ்சல் விரைவில் மீள அரம்பமாகும் என்றும் - ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியத்துக்கும் சமாதான முயற்சிகளுக்கும் கேடு விளைவிக்கும் வகையில் திட்டமிடப்பட்ட பிரசாரமாக இந்த ஒலிபரப்பு இடம் பெற்றுவருகின்றது என நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இலங்கை அரசிடம் புலிகள் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர் என்பது தெரிந்ததே.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்நிதிகளில்

கோப்பாய்,ஜூலை22

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை பகல் 9 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 நாள்கள் திருவிழாக்கள் நடைபெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 31 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-22)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை22

வட்டுக்கோட்டை, உருக்கியவளை ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பாகி நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு 'ஆலய வரலாறும் பாடல்களும்' என்ற நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெறும். இரவு 7.30 மணிக்கு திருவூஞ்சல் இடம்பெற்று இறைவன் வீதியுலா வருவார். (10)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூலை22

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 31 ஆம் திகதியன்று நற்கருணை வழிபாடும், அடுத்த மாதம் முதலாம் திகதியன்று, காலை 7 மணிக்கு திருப்பலிப்பூசையும், அதனை அடுத்து திருச்சொருப பவனியும் இடம்பெறும். (எ-135)

★ ★ ★

மண்டைதீவு,ஜூலை22

மண்டைதீவு புனித சம்பேதுருவானவர் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

உயர்பாதுகாப்புவலயத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் இறுதி சுற்றுப்பிரகாரத்தை இம்முறை கிராமத்தின் வீதிகள் ஊடாக நடத்துவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளன. அண்மைக்காலங்களில் இந்தப் பவனி, கோயில் வளாகத்தின் உட்புறமாகவே நடத்த அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-88)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை22

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

தமிழ்நாடு கோயம்புத்தூர் ஆர்சா வித்தியா குரு குலத்தைச் சேர்ந்த ஸ்ரீசுவாமி தயாந்த சரஸ்வதியின் சீடர், சுவாமி யோகேஸானந்த சுவாமிகள் இந்த ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (எ-7)

## கூட்டுறவுத்தின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் சர்வதேச கூட்டுறவுத்தின விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் டெகனகசபாவதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், யாழ். மாவட்டத் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன், கொழும்பு தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் ப.றணவக்க ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும் மற்றும் பலர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில், நவாலி முருகானந்தா சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'விடியலின் ஆரம்பம்' என்னும் நாடகம், குழுப்பாடல் என்பனவும் இடம்பெறும். (எ-6)

## இருவேறு விபத்துகளில் மாணவிகள் காயம்!

தென்மராட்சி,ஜூலை22

பாடசாலை முடிந்து வீடு திரும்பிய மாணவியை மினிபஸ் மோதிக் காயப்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் நேற்று 2.30 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பாக இடம்பெற்றது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவியான மீசாலை வங்களா வீதியைச் சேர்ந்த தேவராசன் பல்சியா (வயது 16) என்பவரே சைக்கிளில் சென்றவேளையில் மினிபஸ் மோதியதாகக் கூறப்பட்டது. காயமடைந்த மாணவி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)

★ ★ ★

வடமராட்சி,ஜூலை22

பருத்தித்துறை பிரதான வீதியில் - தட்டா தெருவில் நேற்றுக் காலை இடம்பெற்ற லொறி விபத்தில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த 8 வயதுச் சிறுமியான, அதே இடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயலட்சுமி படுகாயமடைந்தார். படுகாயமடைந்த இந்தச் சிறுமி மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-173)

## பாடசாலையில் திருட்டு

வடமராட்சி,ஜூலை22

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இரவு வேளை அறை ஒன்று உடைக்கப்பட்டு பாடசாலை மாணவர்களால் பிரார்த்தனைக்கென உண்டியலில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பணமும் ஒலிபெருக்கிக் கருவிகளும் திருடப்பட்டுள்ளன. (எ-173)

# உசனில் மக்கள் மீளக்குடியமர படையினர் வழிசெய்யவேண்டும்

### பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை22

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தைச் சூழவுள்ள பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் வீடுகளை படையினர் கையளித்து அப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர வழிவகை செய்யவேண்டும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

உயர்பாதுகாப்பு வலயம் அற்ற பிரதேசத்தில் மக்கள் தமது வீட்டில் சுதந்திரமாகக் குடியமரமுடியாத நிலை வேதனைக்குரியதாகும்.

மேற்படி பகுதிமக்கள் சொந்த வீடுகளை படையினரிடம் இழந்துவிட்டு வாடகை வீடுகளில பெரும் துன்பங்களைச் சந்தித்துவருகின்றனர். இந்த நிலைமாறி சொந்த இடத்தில், சொந்த வீடுகளில் மக்கள் மீளக்குடியமர இராணுவம் அனுமதிக்கவேண்டும்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்காதவிடத்து, மக்களால் முன்னெடுக்கப்படவுள்ள மறியற்போராட்டத்திற்கு அனைத்து மாணவர் சமூகமும் குரல் கொடுப்போம் என்பதை அறியத்தருகின்றோம் என்று அதில் உள்ளது. (எ-204)

# மறவன்புலோவில் படையினர் விடுவித்த வயல்களை இலவசமாக உழுவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை22

மறவன்புலோப் பகுதியில் கடந்த வாரம் படையினரால் கையளிக்கப்பட்ட நெல்வயல்களை இலவசமாக உழுதுகொடுக்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வயல்களில் இவ்வருடம் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள வசதியாக விடுவிக்கப்பட்ட அனைத்து வயல்களையும் உழவு இயந்திரங்கள் மூலம் இலவசமாக உழுது கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசனைக் கேட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மேற்படி வயல்களில் காலபோகச் செய்கைக்குரிய விவசாய உள்ளீடுகள் மற்றும் உரவகைகளை வழங்கவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-117)

# ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சைக்கு சுமார் 9 ஆயிரம் பேர் யாழில் தோற்றுவர்

யாழ்ப்பாணம்,ஜூலை22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் 9 ஆயிரத்து ஐந்நூறு பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கென 62 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனக் கல்வி வலய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (எ-13)

# ஊடகவியலாளர்கள் நேற்று கொஸ்கொடவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை22

காலிக்கு அண்மையில், கொஸ்கொடவில் கடந்த 14ஆம் திகதி ஊடகவியலாளர்கள் சிலர், பொலீஸாரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றுமதியம் கொஸ்கொட பொலீஸ்நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இலங்கை சுயாதீன ஊடகவியலாளர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்களும் பங்குபற்றினர். ஊடகவியலாளர்கள் தமது பணிகளைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு ஏற்ற வழிவகைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்திக் கோஷமெழுப்பினர்.

"ஊடகவியலாளர்களைத் தாக்காதே"

"கொலைசெய்தாலும், கைகளை வெட்டினாலும் எழுதுவதை நிறுத்தமாட்டோம்."

"பொலீஸாரை விட ஊடகவியலாள்களே மக்களுக்கு அதிக சேவைகள் செய்கின்றனர்."

போன்ற சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய, இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கத் தலைவர் இரா.துரைரட்ணம் உட்பட மற்றும் பல சிரேஷ்ட ஊடகவியலாள்களும் இதில் கலந்துகொண்டனர்.

முன்னதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான வீதி ஊடாக கொஸ்கொட பொலீஸ் நிலையத்தை நோக்கி முன்னேறிச் சென்றபோது - பொலீஸார், அவர்களை வழிமறித்துத் தடுத்தனர். எனினும், வேறொரு பாதை வழியாக ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸ் நிலையத்தைச் சென்றடைந்தனர்.

கடந்த 14 ஆம் திகதி கொஸ்கொடவில் இடம்பெற்ற சம்பவமொன்றின்போது செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் சிலர், பொலீஸாரால் தாக்கப்பட்டதோடு, அவர்களது வீடியோ மற்றும் புகைப்படக கருவிகளும் சேதப்படுத்தப்பட்டன.

இது குறித்துச் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு, பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவுக்கு முறைப்பாடு செய்திருந்தது. எனினும், இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வர்த்தக சங்கத்தின் அறிவிப்பு

வடமராட்சி,ஜூலை22

பருத்தித்துறை நகர் வர்த்தக நிலையங்கள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் பிரதி சனி தோறும் அரை நேரத்துடன் (பிற்பகல் 2 மணி) மூடப்பட வேண்டும் என பருத்தித்துறை வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

வாரத்தில் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை உள்ள தினங்களில் ஏதாவது ஒரு நாளில் வசேடமாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டால் அதற்கடுத்துவரும் சனிக்கிழமைகளில முழுநேரமாக கடைகளைத் திறக்கலாம் எனவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)



யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் 'பல்கலைக்கழகம் ஒன்றின் இன்றைய நிலை பற்றிய ஓர் எண்ணகரு' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் டென்மார்க் பல்கலைக் கழகத்தின் உணவு பொருளியற்றுறை இணைப் பேராசிரியர் கலாநிதி த.ஸ்ரீகந்தராஜா கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## நூல் ஆய்வரங்கு

கொழும்புத்துறை,ஜூலை22

வைத்திய கலாநிதி க.பாலசுப்பிரமணியம் எழுதிய 'இராவணேஸ்வரன் இந்திர உலா' என்ற இராவணன் வரலாறு பற்றிய நூல் ஆய்வரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பலநோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும் இந்த ஆய்வரங்கில், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி கலந்துகொள்வார்.

ஆய்வுரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளைமுகாமையாளர் பொன். கணேசமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவர். (எ-30)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை22

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

மாலை 5.30 மணிக்கு விசேட பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து கும்பாபிஷேக மலர் வெளியீடு இடம்பெறும்.

நிகழ்வில் அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும், ஆசியுரையை மேற்படி ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ க.மு. சோமசுந்தரக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். மலர் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் நிகழ்த்துவார். (10)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி,ஜூலை22

பருத்தித்துறை மெதடிஸ்தப் பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்குப் பிரபல தொழில் அதிபர் நடேசு பாஸ்கரன், பாடசாலையின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் பொருளாளர் திருமதி இந்திராணி பாஸ்கரன் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.(எ-173)

## கணனிப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜூலை22

மொரட்டுவ பல்லைக்கழக தமிழ் இலக்கிய சங்கத்தின் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான கணனி தொடர்பான பயிற்சி வகுப்பினை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## வறிய மாணவரின் கற்றலுக்கு நிதியுதவி

வலி.தென்மேற்கு,ஜூலை22

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்கும் தாய் - தந்தையை இழந்த - வறிய நிலையிலுள்ள - மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காக புங்குடுதீவைச் சேர்ந்தவரும் தற்போது சுவிஸில் புலம்பெயர்ந்து வசித்து வருபவருமான ஐ.தர்மகுலசிங்கம் என்பவர் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த நிதி கல்லூரியில் கற்கும் தாய் - தந்தையை இழந்த வறிய மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகக் கல்லூரி அதிபர் ச. சிவனேஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ-135)

## வீடியோப் படக்காட்சி

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டம் வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் உலப் புகழ்பெற்ற திரைப்பட நெறியாளர் 'சத்திய ஜிதரே' இயக்கிய 'அகன்றுக்' என்ற திரைப்படம ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் வீடியோ காட்சியாக நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த படம்பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (எ)

## அனுமதியின்றி மாட்டிறைச்சி விற்றவர் கைதானர்

தென்மராட்சி,ஜூலை22

அனுமதிப் பத்திரமின்றி கள்ளுத்தவறணையில் மாட்டிறைச்சி விற்பனை செய்த நபர் பொலீஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்ட சம்பவம் நேற்று வரணியில் இடம்பெற்றது.

தென்மராட்சியில் மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டதையடுத்து மாட்டிறைச்சி விற்பனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த வேளையில் சட்ட விரோதமாக மாட்டிறைச்சியினை கள்ளுத்தவறணையில் விற்பனை செய்த ஒருவரை கொடிகாமம் பொலீஸார் கைது செய்ததுடன் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இறைச்சியையும் கைப்பற்றினர். (எ-117)

உதயன்

# நிலைமையைப் புரியாத அரசுத் தலைமை.....!

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

அவர் ஆற்றிய உரையை நியாயப்படுத்துவதோ அல்லது அதற்கு எதிராக ஐக்கியப்பட்டுக் கிளர்ந்தெழுந்த பெரும்பான்மை இன - பேரினவாத - எம்.பிக்களின் நடவடிக்கையை விமர்சிப்பதோ எமது நோக்கமல்ல.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சி தோற்றுப்போனால் ஏற்படக்கூடிய விபரீதங்கள் தொடர்பாகக் கஜேந்திரன் எம்.பி. குறிப்பிட்ட விடயங்களே சர்ச்சையை ஏற்படுத்தின. அவர் ஆற்றிய உரையின் அப்பகுதி, நாடாளுமன்றப் பதிவேட்டிலிருந்து முழுமையாக நீக்கப்படுகின்றது என்ற உத்தரவு சபாநாயகர் ஆசனத்தில் இருந்து வந்திருப்பதால், அவற்றை அப்படியே பிரசுரித்து, அவை குறித்து அக்குவேறு ஆணிவேறாக இப்பத்தியில் அலசுவது சட்டமுறையானதாக இருக்கமாட்டாது.

கஜேந்திரன் எம்.பியின் உரை ஜாதிக ஹெல உறுமய எம்.பிக்கள் சீற்றத்தோடு குறிப்பிட்டது போன்று பக்கச்சார்பானதாக இருக்கலாம். பிரிவினைக்குத் தூண்டுவதாக இருக்கலாம்; அமைதி முயற்சிகள் தோற்று, மீண்டும் போர்வெடித்தால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள், விளைவுகள் தொடர்பாக அவர் கூறிய ஆருடங்கள், பேரினவாதிகள் கருதுவது போல 'வெறும் பகல் கனவாகக்' கூட அமையலாம்.

ஆனால், மீண்டும் யுத்தம் வெடித்தால் பொதுவாக ஏற்படக்கூடிய விபரீதம் அவர் குறிப்பிட்டதுபோல மோசமாக இருக்கும் என்பதை மட்டும் அரசியல்வாதிகள் உணர்ந்துகொள்ளவேண்டும். அதுதான் யதார்த்த நிலை.

அந்த உண்மை நிலையை அரசியல் தலைவர்கள், அரசுத் தலைவர்கள் புரிந்துகொள்ளவேயில்லை என்பது போலத்தான் நிலைமை தென்படுகின்றது.

அமைதி முயற்சிகள் தோற்றால் ஏற்படக்கூடிய நிலைமை குறித்து மட்டுமல்ல, அமைதி முயற்சிகளின் இப்போதைய நிலை குறித்துக்கூட யதார்த்த நிலையை அரசுத் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றே கொள்ளலாம்.

"இலங்கை இன்று யுத்தத்தின் விளிம்பில் உள்ளது. அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பினருமே யுத்தத்துக்குத் தயாராகின்றனர். எப்போது, யார் போரைத் தொடங்குவார்கள் என்பதுதான் இன்றுள்ள நிலைமை" - என்று தமது இயக்கத்தின் உள்ளூர்ப் பொறுப்பாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், நிலைமை அத்தகைய விபரீதக் கட்டத்தை அடைந்துள்ளது என்ற சிந்தனையே அரசுத் தலைவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகைய மோசமான கட்டத்தில் நாடு இருப்பதை உணர்ந்துகொண்டவர்கள் போல அவர்களின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் வெளிப்படவில்லை.

அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - மீள முன்னெடுப்பதற்கான ஆக்கபூர்வமான சூழ்நிலை தோற்றுவிக்கப்படவே இல்லை.

ஆனால், ஏதோ உடனடியாகத் தொடங்கப் போகின்ற சமாதானப் பேச்சுக்குப் புலிகளின் நிகழ்ச்சி நிரலைத் தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றவர்கள் போல வெளிநாட்டுத் தலைவர்களுக்கும், சர்வதேச உலகுக்கும் தகவல் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் அரசுத் தலைவரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர்.

சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு மட்டுமன்றி, கடந்த இரண்டரை வருடங்களாகத் தாக்குப்பிடிக்கும் யுத்த நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு நிலை சீர்கெட்டு மோசமாவதைத் தடுக்கக்கூட பயனுள்ள நடவடிக்கை எடுக்காமல் பார்த்திருக்கும் இவர்கள் அமைதி முயற்சிகளின் எதிர்காலம் குறித்துப் பயனற்ற கற்பனை உலகில் வாழ்பவர்கள் போலக் கதை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு வந்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சரிடம் ஜனாதிபதி குமாரதுங்க கூறிய கருத்துக்கள் இந்தியாவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட நிலைப்பாடு, உலகம் சுற்றும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆங்காங்கே நீட்டி முழக்கும் விடயங்கள் என்பன நிலைமையின் மோசத்தை - ஆபத்தை - நெருக்கடியை - விபரீதத்தை - அவர்கள் மிகச்சின்னதாக - வெகு 'சிம்பளாக' எடுத்திருக்கின்றார்கள் என்றே எண்ணவைக்கின்றன.

யதார்த்த நிலைமையின் தாற்பரியம் புரியாமல்தான் இப்படி நடக்கின்றார்களா? அல்லது அதிகாரமிடுக்கு அவர்களை அப்படி நடக்கத் தூண்டுகின்றதா? என்பது தெரியவில்லை. எப்படி என்றாலும் மோசமான விளைவு முழுநாட்டையுமே பாதிக்கும் என்பதனை அவர்கள் உணராதிருப்பது ஏனோ?

# மாவிட்டபுரம் கந்தனுக்குப் பெருவிழா இன்று ஆரம்பம்; தங்கு, தடங்கலின்றிச் சென்று வழிபடுவது எந்நாளோ...?



பண்டைய பெருமைக்குரிய தலங்களுள் ஒன்றாக விளங்குவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலாகும். இது சோழ இராஜகுமாரியாம் திசை உக்கிர சோழன் மகள் மாருதப்புரவீக வல்லியின் குன்ம பிணியையும் அதனால் உண்டான குதிரை முகத்தையும் மாற்றி அருளிய பெருமையுடையது.

அவ்வாறு தன் பிணிதீர்த்த பெருமான் அழகுத் தெய்வமாகிய முருகனே ஆவார் என நினைந்து அவ்விடத்திலேயே "அழகன் முருகன் எனையாண்ட செல்வன்" என நினைந்து அவளால் கட்டப்பட்டதும் "அபிஷேகக் கந்தன்" என்றும் அழைக்கப்படும் தலமே மாதிருவர் புடைசூழ மயில் மீதில் காட்சிதரும் இப்பதியாகும்.

ஆகம விதிகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயத்தின் திருவிழா ஆடித்திங்கள் 7 ஆம் நாளான இனறு வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

*அருள்மாவைப் பதியழகன்*
*திருப்புகழைப் பாடவே*
*அகமுருகும் அருளொழுகும்*
*அடியவர்தம் நெஞ்சிலே*
*இருளகலும் இனியவடி வேல்முருகன்*
*சொல்லிலே*
*இடரகன்று ஒளிபிறக்கும்*
*வேளையிந்த வேளையே*

என்று துதிபாடவும் காம்யோற்சவம் பெருவிழா ஆரம்பமாகித் திருவிழா 25 தினங்கள் சிறப்புற நிகழும்.

இநதத் திருவிழாக்களில் ஐந்தாம்நாள் நிகழும் ஆறுமுகப் பெருமானின் திருநடனக் காட்சியும் பத்தாம்நாள் நிகழும் மஞ்சமும் பக்தர் நெஞ்சினைத் தொட்டிழுப்பன.

அன்றெல்லாம் அந்தி சாயும் வேளையில் ஆயிரமாயிரம் மாவிளக்குகள் ஒளிசிந்த முருகனைக்காணும் அற்புதக் காட்சியும் பலகோடி பக்தர் புடைசூழ விண்முட்டும் சப்பரம் வரும் காட்சியும் அச்சமின்றிப் பக்தர் வந்து பஞ்சரதபவனி கண்டதும் அதியற்புதமாம்.

ஆறுமுகப்பெருமானின் திருநடனக் காட்சி கண்டும் இறுதிநாளில் ஆடி அமாவாசைத் தினத்தில் எருதுகள் பூட்டிய வண்டியில் புனித நீராடச்செல்லும் காட்சியும் பக்தர் நெஞ்சில் இன்றும் பக்தி சுரக்கும் தன்மை கொண்டவை.

இன்று கடந்தகால திருவிழாக்களை நினைத்து முருகனைக் கசிந்துருகித் துதிக்க மனம் ஏவுகின்றது.

அதனாலேயே -

*மந்திர மறைநாதம் சிந்தை தொட்டி*
*ழுத்திட*
*கொடியேறும் நிலையென்றுதானோ?*
*மந்த காசமுடனேநீ திருநடனக்காட்சி*
*தந்து*
*சிந்தைதொட் டிழுப்பதும் என்றோ?*
*வஞ்சியர் இருவரொடும் மஞ்சமதில்*
*காட்சிதந்து*
*மனங்குளிரச் செய்வதும் என்றோ?*
*குஞ்சரி முகம்வாட வள்ளியுடன்*
*நீவரவும்*
*எட்டுக்குடி ஏசலென்று கேட்போம்?*

அடியார்களின் இத்தகைய மன ஏக்கங்களுக்கு மத்தியில் ஒரு காண்யோற்சவமாகவேனும் திருவிழாக்கள் நடைபெறுவது பக்தர்களுக்கு ஒருவித ஆறுதலைத் தருகிறது.

## முருகபக்தன்

இன்று நாட்டிலே போரோய்ந்து, ஒரு சுமுகநிலை ஏற்பட்டுள்ளது. இன்றும்கூட நாம் மாவைக்கந்தன் தேரிலே எழுந்தருளி ஆரோகணித்து உள்ளம் உருகுகின்ற அந்தக் கண்கொள்ளக்காட்சியைக்கண்டு களிக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையிலேயே உள்ளோம்.

குடாநாட்டை ஆக்கிரமித்த யுத்தம், 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாவைக் கந்தன் உற்சவத்தை நிறுத்தியது - தடை செய்தது.

1996ஆம் ஆண்டு குடாநாட்டைவிட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடாநாட்டிற்கு வந்தும் - புரிந்துணர்வு உடன்படிக்கை 2002 இல் கைச்சாத்தாகி நாட்டில் சமாதானம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்தும் - இன்றுவரை கருணைக் கடவுளான மாவைக்கந்தன் ஆலயத்திலே மகோற்சவம் இல்லை. புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்பும் அடியார்கள் தாம் நினைத்த நேரத்தில் மாவைக்கந்தன் ஆலயத்தைச்சென்று தரிசிக்க முடியாதநிலையே நீடிக்கிறது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வேலி போடப்பட்டிருக்கின்றது. இந்த விசேட தினங்களில் மட்டும்தான் இறைவனைக்காண வரையறை செய்யப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்களால்கூட ஆலய விடயத்திலேனும் இம்மியும் முன்னேற்றம் காணமுடியவில்லை. மகோற்சவகாலம் அப்போது கூட பக்தர்கள் மாவைக் கந்தனைத் தரிசிக்கத் தடங்கல், தாமதம், சோதனை இன்றிச் செல்லமுடியவில்லையே!

ஆடி அமாவாசையன்று எம்பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராகத் தீர்த்தமாடுவதற்காகக் கீரிமலை செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஆலயத்தில் மகோற்சவம் இடம்பெறாவிடினும் எம்பெருமான் ஆடி அமாவாசையன்று கீரிமலை சென்று தீர்த்தமாடுகின்ற பெரும் பாக்கியம் ஏதோ ஏற்பட்டுள்ளது.

ஆகவே, மீண்டும் வெகுவிரைவில் அடியார்கள் மாவைக்கந்தனை நினைத்தவுடன் சென்று வழிபடும் இயல்புநிலை எப்போது உண்டாகப்போகிறது. கோயிற்கடவை என்று சிறப்பாக அழைக்கப்பட்ட பிரதேசத்தில் மீண்டும் மக்கள் குடியமர்ந்து, பாதுகாப்பு வலயம் என்ற வேலி தகர்க்கப்பட்டு, ஆலயத்தில் இயல்புநிலை ஏற்பட்டு, அனைவரும் முருகப்பெருமான் தேரிலே ஆரோகணிக்கின்ற காட்சியைக் கண்டு உள்ளம்நெக்குருக முருகப்பெருமான்தான் அருள்புரியவேண்டும்.

✲

# உலகத் தமிழர் பேரமைப்பின் ஆண்டுவிழாவில் காசி. ஆனந்தனுக்கு உலகப் பெருந்தமிழர் விருது

## ஈழத்து எம்.பிக்களும் உரையாற்றுவர்

சென்னை,ஜூலை22

உலகத் தமிழர் பேரமைப்பின் இரண்டாம் ஆண்டுநிறைவு மாநாடு, பெங்களூரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மாநாடு பெங்களூரில் உள்ள அல்சூர்ப் பகுதியல் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெறும். பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன், பெரியார் தி.க.தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த் தேசப்பொதுவுடைமை கட்சியின் பொதுச்செயலாளர் பெ.மணியரசன் உட்படப் பல தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்று உரைநிகழ்த்துவர்.



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மா.க.ஈழவேந்தன், பெ.சந்திரசேகரன், மாவை சேனாதிராசா மற்றும் மலேசிய எழுத்தாளர் பீர்முகமது, தென் ஆபிரிக்காவிலிருந்து கோவிந்தசாமி, பிரான்ஸிலிருந்து அலன் ஆனந்தன் ஆகியோரும் மாநாட்டில் உரையாற்றுவர்.

கலாநிதி ஆறு.அழகப்பன், அறிவுமதி, தியாகு, சங்கமித்ரா, வணிகர் சங்கததலைவர் த.வெள்ளையன், புலவர் பச்சையப்பன் உட்படப் பல்வேறு தரப்பினரும் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

கவிஞர் காசி ஆனந்தன் உலகத் தமிழர் கொடியை ஏற்றி மாநாட்டைத் தொடக்கிவைப்பார். விழாவில் அவருக்கு உலகப் பெருந்தமிழர் விருது வழங்கப் படவுள்ளது.

மாநாட்டில் தமிழ்மொழி, இன மேம்பாட்டிற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஆக்கம் தேடித்தரத்தக்க ஐந்து நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

(அ)

# தரம் 5 மாணவர்களுக்கு மாதிரிப் பொதுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை22

இவ்வாண்டு தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோறறவுள்ள யாழ். மாவட்ட மாணவர்களுக்கான மாதிரிப் பொதுப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சை எழுதும் ஆற்றலைத் தூண்டும் வகையிலும் மாணவர்களுக்குப் பயிற்சிக்களமாக அமையவுள்ள இந்தப் பொதுப் பரீட்சை புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள பரீட்சை நிலையங்களிலேயே நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பான விளக்கமளிக்கப்பட்ட சுற்றறிக்கையொன்று வலயக் கல்வி பணிப்பாளர்களால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விடைத்தாள்கள் பொதுநிலையங்களில் வைத்துத் திருத்தப்பட்டு ஓகஸ்ட் 6ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களிடம் அவர்கள் பெற்ற புள்ளிகளின் விவரங்களுடன் வழங்கப்படும் - என்றார் அவர்.

(ஓ-13)

## நாளை

ஆடி 08
வெள்ளிக்கிழமை
(23.07.2004)
திதி : ஷஷ்டி
முன்னிரவு 7.26 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பின்னிரவு 3.29 வரை.
சுபநேரம்: 6.02 - 7.32
ராகுகாலம்: 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்ல மனம் கொண்டவனுக்கு நயவஞ்சகம் புரியாது.

## உயர்தரப் பரீட்சைமுடிவு ஓக.10 இல் வெளிவரும்

கொழும்பு,ஜூலை22

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைமுடிவுகள் அடுத்தமாதம் 10ஆம் திகதி அளவில் வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தவருடம் பரீட்சையில் சித்திபெய்திப் பல்கலைக்கழகம்செல்லத் தகுதிபெற்ற மாணவர்கள் இந்த வருடத்திலேயே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதனடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஓகஸ்ட் 11 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விண்ணப்பங் கோரவுள்ளது.

2004/2005 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர்கள் இம்முறை முதன்முதலாக யாழ். பல்கலைக்கழகத்திலேயே டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி அனுமதிக்கப் படுவர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

அனைத்து பல்கலைக்கழகங்களுக்குமான அனுமதியை ஜனவரி முதல் வாரத்தில் பூர்த்திசெய்ய மேற்படி ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

(ஓ-204)

## மரம் நடுகை

உள்ளூராட்சி வாரத்தையிட்டு மரம் நடுகைத் திட்டத்திற்கென 400 மரக்கன்றுகளை யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினர் கொள்வனவு செய்துள்ளனர்.

இந்த மரக்கன்றுகள் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் மர நடுகைத் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

# ஷப்றாவில் வைப்புச்செய்தவர்களுக்கு ஐந்தாவது தடவை மீளளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்தவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தொகையின் ஒரு பகுதி மீளளிப்புச் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வைப்புச்செய்த தொகையில் ஐந்து சத வீதத்தை வழங்கும் செயற்பாடுகள் கடந்த இருபதாம் திகதி ஆரம்பமாகின.

21/9, பொல்ஷென்கொட கார்டின்ஸ், கொழும்பு-5 என்ற முகவரியில் உள்ள ஷப்றா யுனிக்கோ அலுவலகத்தில், வைப்புச் சான்றிதழையும் வைப்பாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் சமர்ப்பித்து மீளளிப்புத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் எனறு புதிய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

நேரில் சென்று பெறமுடியாதவர்கள் வைப்புச் சான்றிதழையும், உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டைப் பிரதியையும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவர் மூலம் அனுப்பியும் காசோலை களில் பெற்றுக்கொள்ளலாம். அதற்கும் வசதி இல்லாதவர்கள் வைப்புச் சான்றிதழ், அடையாள அட்டையின் பிரதி, சுயமுகவரி இடப்பட்ட தபாலுறை என்பனவற்றை அனுப்பினாலும் காசோலை உரியவருக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்தவர்களுக்கு இதுவரை நான்கு தடவைகள் குறிப்பிட்ட வீதங்களில் பணம் மீளளிக்கப்பட்டது. இவற்றைப் பெறத் தவறியவர்கள் தகுந்த காரணங்களைக் காட்டி அவற்றைத் தருமாறு மேன்முறையீடு செய்யலாம் என்றும் - முந்திய தடவைகளுக்கு மீளளிப்புச் செய்வதற்கு போதிய பணம் நிர்வாகத்திடம் இருக்கும் பட்சத்தில் மீளளிப்பு வழங்கப்படக் கூடும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ)

## அகுபங்சர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு (AWAIRENESS SEMINAR)

இந்தியாவில் அகுபங்சர் சிகிச்சையில் சாதனை படைத்துவரும் மருத்துவப் புயல் டாக்டர் ஜோசப் போல் (B.H.M.S.,MD) பேராசிரியர் ஹோமியோபதி பல்கலைக்கழகம்-சேலம்) (W.H.O- ஹோமியோபதி அங்ககாரம் பெற்றவர்) அவர்களின் அகுபஙசர் சிகிச்சை சம்பந்தமான விரிவான கருத்தரங்கு.

"நோய் பற்றி முழுமையான பரிமாணப் பார்வை"+ "நோய் குணமாகின்ற தாற்பரியம்" சம்பந்தமாக நீங்கள் இதுவரை அறிந்திராத முழு மையான விளக்கம். இன்று (22-07-04) வியாழன் பி.ப. 3.00 மணி. சித்த மருத்துவத் துறை, யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

★ விரிவுரையாளர்கள், மாணவாகள, பழைய மாணவர்களுக்கு மட்டும்.

★ நாளை (23-07-04) வெள்ளி காலை 9.30 மணி.

விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

**யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்.**

வெள்ளி பி.ப. 2.30 கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி (34376)(43-12-11)

## கலையாத நினைவுடன் கலைந்த மூன்றாவது ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
07
~
09
~
1940



ஆறுமுகனின் அடியில்
26
~
07
~
2001

அமரா **வைரமுத்து வரப்பிரசிங்கம்**

(ஓய்வு பெற்ற அஞ்சலக ஊழியர், தெல்லிப்பழை)

திதி: ஆடி பூர்வபக்க ஷஷ்டி

ஆதரிக்க ஆயிரம் உறவுகளுண்டு, அரவணைக்க அன்பான உள்ளங்களுண்டு, ஆனால், 'அப்பா' என்றழைக்க நீங்கள் இல்லையே அப்பா! நாளகள் பல நகர்ந்து நானிலத்தில் மூன்றாண்டென்ன எத்தனை ஆண்டுகள் வரினும், எங்கள் இதயங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே அப்பா! உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும். *உங்கள் ஆத்மா சாந்திபெற கார்த்திகைக்குமரன் அருள்புரிவான்.*

என்றும் ஈரவிழிகளுடன் சோகம் சுமக்கும் மனைவி, பிள்ளைகள், சகோதரர், மைத்துனர்கள்.

தற்காலிக முகவரி:
*களையோடை கண்ணகை அம்மன் கோயிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.*

நிரந்தர முகவரி:
*கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.*

(34377)(43-12-11)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 596 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 20-07-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4813279-4828241 |

வெற்றி இலக்கங்கள்
**05 16 42 52**

லக்கினம் மேடம்

ஜக்பொட் பரிசு ரூபா.32,18,150/- வெல்லப்படவில்லை. இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 39,57,250/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,31,079 | 10/- | 33,10,790/- |
| 2.இலக்கங்கள் | 30,342 | 20/- | 6,06,840/- |
| 1.இல + லக்கினம் | 30,082 | 30/- | 9,02,460/- |
| 2.இல + லக்கினம் | 2,770 | 100/- | 2,77,000/- |
| 3.இலக்கங்கள் | 816 | 500/- | 4,08,000/- |
| 3.இல + லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 32,18,150/- | - |
| மொத்தம் | 3,95,171 | - | 62,95,090/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,95,090/-

தொடர் இல. 5790760 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 23ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

481451-38-55
4822627-3-36
4819125-0-47
4814303-0-98
4823624-5-06

## உள்ளூராட்சி வாரச் செய்திகள்

வடமராட்சி,ஜூலை 22

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச சபையில் நீண்டகாலம் சேவையாற்றி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி வார இறுதிநாளான எதிர்வரும் 28 ஆம் திகதி கௌரவிக்கப்படவுள்ளனர். பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சி.பசுபதி தலைமையில் உள்ளூராட்சிவார நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வுகளை ஒட்டி எதிர்வரும் தினங்களில் ஆனைவிழுந்தான் புனிதநகர் வீதி சிரமதானம் மூலம் திருத்தியமைத்தல், மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் சிரமதானப்பணி, அல்வாய் மகாத்மா சனசமூக நிலையம், புலோலி குரும்பைக் கட்டி சன சமூக நிலையம், வராத்துப்பளை சனசமூக நிலையம் ஆகியவற்றில் கருத்தரங்குகளும், சுகாதாரா நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

(ஒ-173)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை22

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் செயற்றிட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இன்று அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் பொது விளையாட்டு மைதானம், பொது பாதைகள் அமைத்தலும் நாளை பொது அமைப்புகள் ஊடாக சுற்றாடல் தூய்மையைப் பேணுதல் பற்றிய கருத்தரங்குகளும்

24ஆம் திகதி உள்ளூராட்சி ஊழியர்களிடையே கணனி பயன்பாடு பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும், ஜூலை 25ஆம் திகதி நூலக வளர்ச்சி, சூழல் சுற்றாடல் மேம்படுத்துகை தொடர்பாக பொது மக்கள் பொது அமைப்புகளுடனான கருத்தரங்கும் நடத்தப்படும் என செயலாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

(ஒ-31-117)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூலை22

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

விளையாட்டுப் போட்டிகள், நூலகக் கண்காட்சிகள், சிரமதானங்கள், மரம் நடுகை, சூழல் பேணல் தொடர்பான கண்காட்சிகள் இலவச மருத்துவ முகாம், கலை நிகழ்வுகள் என்பவற்றை இவ்வாரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அவற்றை நடத்தியும் வருகின்றனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் பங்குபற்றும் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மென்பந்தாட்டம் போன்றன தற்போது இடம்பெற்று வருகின்றன.

தாச்சிப் போட்டிகள் இன்றும் நாளையும் இணுவில் அண்ணா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி மரம் நடுகை, சிரமதானம், கலைவிழா நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-152)

★ ★ ★

ஊர்காவற்றுறை,ஜூலை22

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினரால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் பொது அறிவு வினாடி வினாப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ உயர்தரப் பிரிவு மாணவர்கள் மற்றும் ஆண்டு ஆறு தொடக்கம் ஆண்டு பதினொன்று வரையான மாணவர்களுக்கு என இரண்டு பிரிவாக இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஓர் அணியில் 5 பேர்கொண்ட மாணவர்கள் இடம்பெறுவர். ஒரு பாடசாலையிலிருந்து மேற்படி இரு பிரிவிற்கும் தலா ஓர் அணியை பங்கு பற்றச் செய்யலாம். போட்டியின் வினாக்கள் தமிழ்மொழி, இலக்கியம், விஞ்ஞானம், சுகாதாரம், உள்ளூராட்சி அமைப்புகள் உட்பட அரசியல் சமூகவியல், வரலாறு போன்றவற்றுடன் சமகால நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-16)

## இன்று முதல்

NET 2 PHONE டொலர்
GO 2 CALL டொலர்

கனடா, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகளுகளுக்கு நிமிடத்திற்கு ரூபா 2.70 மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விலைச் சலுகை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு T.P. 0777593127, 0776162015

(34358) (43-11-12)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்

**சிவஸ்ரீ கை.நமசிவாயக்குருக்கள்**

அவர்களின் (17.07.2004) திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
யா/புற்றளை மகாவித்தியாலயம்,
புலோலி. (C/36069)(43-12-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12
12
1954



மறைவு
22
06
2004

**அமரர் வியாகேசர் நாகரத்தினம்**

(ராசு வாத்தி)

*ஆயிரம் உறவுகள் வந்துபோகும்*
*அனைத்துமே அடுத்த நாள் மறந்துபோகும்*
*உங்களில் நாம்கொண்ட உறவுதனை*
*எப்படி மறந்து நாம் வாழ்ந்திருப்போம்.*

இன்று (22.07.2004) வியாழக்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்தியமும், நினைவஞ்சலி நிகழ்வும் முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.* (34378)(40-43-12-11) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லையா சிவகாமி

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சிவகாமி நேற்று (21.07.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமலம்மா மற்றும் சபாரட்ணம், தையல்நாயகி ஆகியோரின் சகோதரியும் இராமகிருஷ்ணன், சாரதாதேவி, நாராயணன், சிறீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலசேகரம், குஞ்சுமணி, வசந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்சினி (இராமநாதன் கல்லூரி மாணவி), தாரணி (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), தஜீவன், றதீஷன், கஜவதனன், கபில்வர்மன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு கல்லாக இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (34372) (24-11-12)
தகவல்: செ.இராமகிருஷ்ணன் (மகன்).

### திருமத சவிரிமுத்து அருளம்மா

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி சவிரிமுத்து அருளம்மா அவர்கள் நேற்று (21.07.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற லிகோரி சவிரிமுத்து அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரேசம்மா, திருமதி பிரான்சிஸ்கா, திருமதி லூசியா, காலஞ்சென்ற சின்னமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மெரிசியா, ஜேசுதாசன் பிலோமினா (இத்தாலி), மரியதிரேசா, யசிந்தா, றேசலினா (இத்தாலி), டாக்டர் அருள்நேசன் (RMO மத்திய மருந்தகம், கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், மேரி ஜோசப்பின் (மகளிர் கல்லூரி-சாவகச்சேரி), கருணாகரன், பிரான்சிஸ் (இத்தாலி), டாக்டர் சத்தியா (RMO சுற்றயற் கூறு, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.07.2004) வியாழக்கிழமை மாலை 2 மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித லிகோரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயிற்குடியிருப்பு,*
*சாவகச்சேரி.* (34375)(43-12-11)
தகவல்: ச.ஜீ.ஜேசுதாசன், (மகன்)

## படையினரால் வீதித் தடைகள் அமைப்பு

குடத்தனை,ஜூலை22

வடமராட்சி கிழக்கிற்குச் செல்லும் பிரதான பாதையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் படையினர், வீதியின் இரு மருங்கும் அங்கொன்றும் இங்கொன்றுமாக பனங்குற்றிகளால் வீதித்தடைகளை அமைத்துள்ளனர்.

இதனால் இப்பகுதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

மேற்படி இராணுவ முகாமைக் கடந்தே பருத்தித்துறையில் இருந்து அம்பன் வரையான பஸ்சேவை மற்றும் குடத்தனைப் பகுதியில் மணல் ஏற்றும் உழவு இயந்திரங்கள்,லொறிகள் என்பன செல்கின்றன.

இந்த வீதித் தடைகளால் மேற்படி வாகனங்களின் சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இது இவ்வாறுஇருக்க, சில வேளைகளில் இம்முகாமில் கடமையில் நிற்கும் இராணுவத்தினர் சைக்கிளில் செல்லும் பிரயாணிகளை இறங்கிச் செல்லுமாறும் பணிக்கின்றனர். 'சமாதான காலத்தில் இச்செயற்பாடு மக்களுக்கு பெரும அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.(10-78)

## வளர்த்த நாய் முகத்தில் கடித்தது

சங்கானை,ஜூலை22

விசர் பிடித்த வளர்ப்புநாய் ஒன்று ஆறு வயது நிரம்பிய அவ்வீட்டுச் சிறுமியை முகத்திற் கடித்துக் காயப்படுத்திய சம்பவம் ஒன்று சங்கானையில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், இந்த நாய் இப்பகுதியில் உள்ள இருவரைக் கடித்துக் காயப்படுத்தியதோடு அயலிலுள்ள வளர்ப்பு நாய்களையும் கடித்துளளது.

அராலி வீதி சங்கானையைச் சேர்ந்தவர்களான முருகையா ரேணுகா (வயது 6), திருமதி சடாசசரம் நிர்மலா (வயது 45), திருமதி இராசேஸ்வரன் கண்மணி (வயது 50) ஆகியோரே நாய்க்கடிக்குள்ளானோர் ஆவர். (10-29-204)

## .இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

கோவில் கோபுரத்துக்கு மைபூசிக்கொண்டிருந்த வேளையில் சாரமரம்அறுந்து சுமார் 30 அடி உயரத்தில் இருந்து விழுந்த இருவர் படுகாயமடைந்தனர்.

நவாலி களவோடை அம்மன் கோயில் கோபுரத்திற்கு ஆடிப்பூர உற்சவத்தை முன்னிட்டு மை பூசியவேளை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நவரலியைச் சேர்ந்தவர்களான நவரட்ணம் சாம்பசிவம் (வயது50), குமரையா ரவீந்திரன் (வயது 43) ஆகிய இருவருமே படுகாயமடைநதவர்களாவர். படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (10-15)

## மகப்பேற்று நிலையத்தில் ஊழியர் இன்றி மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

கொடிகாமம் மத்திய மகப்பேற்று மருத்துவ நிலையத்துக்கு ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மேற்படி மருத்துவமனை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளரால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு இரு மாதங்கள் ஆகிவிட்டது. இந்நிலையிலும் இதற்கான ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரசவத்திற்காக வரும் பெண்கள் மருத்துவமனையில் ஊழியர்கள் இன்மையால் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-204)

## ஒளிராத வீதி விளக்குகள்

கோப்பாய்,ஜூலை22

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனைக்குச் செல்லும் பாதையில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் கடந்த 2மாதங்களாக ஒளிரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இரவு நேரங்களில் அவசர சிகிச்சை பெறச்செல்லும் நோயாளிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதேவேளை, உரும்பிராய் கிழக்குப் பகுதிக்கு வலுக்குறைந்த மின்சாரம் விநியோகிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(ஒ-72)

## செம்பியன்பற்று நூலகத்தை மீள இயக்கக் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு,ஜூலை22

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் செம்பியன்பற்று உபஅலுவலகத்தின் பொது நூல்நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மாணவர்களும் பொதுமக்களும் கோரிவருகின்றனர்.

2004ஆம் ஆண்டுவரை இப்பொதுநூல் நிலையம் செம்பியன்பற்று உப அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது.

செம்பியன்பற்று உப அலுவலகக் கட்டடமும் பொதுநூல் நிலையத்திற்காக நிர்மாணிக்கப்பட்டு முடிவுறாத நிலையில் இருந்த கட்டடமும், யுத்தத்தினால் சேதமடைந்த நிலையிலேயே தற்போது காணப்படுகின்றன.

அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததையடுத்து ஏனைய அரச கட்டடங்கள் புனரமைப்பு செய்யப்பட்டும் புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்றன. இருந்தபோதிலும் ,இவ்விரு கட்டடங்களும் கவனிப்பாரற்ற நிலையிலேயே இருந்து வருகின்றன. (ஒ-182)

# 'டெங்கு' நோய்த் தடுப்பு நடவடிக்கை குடாநாட்டில் திருப்தியளிக்கவில்லை

## மாகாண உள்ளூராட்சி செயலர் கவலை

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். மாவட்டத்தில் டெங்குநோயைத் தடுபபதற்கு உள்ளூராட்சிச் சபைகள் எடுத்த நடவடிக்கை போதுமானவையல்ல.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

டெங்குநோய் இன்று நாடளாவிய ரீதியில் மரணங்களை ஏற்படுத்தி வருகின்றது. இந்நோயினை கட்டுப்படுத்த உள்ளூராட்சி சபைகள் அந்தந்தப் பகுதி மாகாண சுகாதாரசேவைகள் அலுவலகங்களுடனும் சுகாதார வைத்திய அதிகாரிகளுடனும் சேர்ந்து நடவடிக்கை எடுக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக சுற்றறிக்கை உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஆனால், இதுவரை மேற்படி நோய்த் தடுப்புக்கு யாழ் குடாநாட்டில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக எமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றார் அவர்.

அத்துடன், உள்ளூராட்சிப் பிரதேசத்தில் நீண்டகாலமாகச் சுத்தம்செய்யப்படாது துர்நாற்றம் வீசும் நிலையிலுள்ள கால்வாய்களும், நீர்வழிந்தோடாத இடங்களும் சீர்செய்ய முதலில் நடவடிக்கை எடுக்குமாறு அவர் உள்ளூராட்சி சபைகளைக் கேட்டுள்ளார்.

மேலும் - டெங்கு நோய் தொடர்பாகச் சகல உள்ளூராட்சி சபைகளும் மக்கள் விழிப்புணர்வு அடையக்கூடிய விதத்தில் துண்டுபிரசுர வெளியீடுகள் மற்றும் கருத்தரங்குகளை சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து உடன் மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-185)



வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கியில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் கடன்வழங்கும் நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகனறாஸ் கடன் வழங்குவதையும், அருகில் அப்பகுதிக் கிராம அலுவலர் செல்வி ந.சணமுகம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்:வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)*

# காரைநகரில் மருந்துப் பற்றாக்குறையை நீக்கக்கோரி பணிப்பாளருக்குக் கடிதம்

காரைநகர்,ஜூலை22

காரைநகர் பிரதேசத்தில் நெருப்புக்காய்ச்சல் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளன. அவற்றை நிவர்த்திசெய்து கொடுக்குமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோருவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பதில் பிரதேச செயலர் ஜே.எகஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. அதிலேயே இந் தத் தீர்மானம் எடுக்கப்பட்டு கடிதம் மூலம் உடன டியாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்குக் கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-73)




# வறிய குடும்பங்களின் வீடுகளை திருத்தியமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் கியூடெக் நிறுவனத்தினால் நூற்றிஐம்பது வீடுகள் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

சங்கானை, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் வீடுகளே இத்திட்டத்தின் கீழ் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

இருபிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா 75 வீடுகள் வீதம் இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே உதவிகள் எவையும் வழங்கப்படதா மிகவும் பாதிப்படைந்த பகுதிகள் இனங்காணப்பட்டு இத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்களும் கிராம அலுவலர்களும் மேற்கொண்டுள்ளனர். (ஒ-86)

# பிறப்பு, இறப்பைப் பதிவுசெய்ய வலி.மேற்கில் நடவடிக்கை

வலி,மேற்கு,ஜூலை22

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் காலம் கடந்த பிறப்பு இறப்புக்களை பதிவு செய்யவுள்ள பொதுமக்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டப் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் நடமாடும் சேவையொன்று வலி. மேற்குப்பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையின் போது காலம் கடந்த பிறப்பு, இறப்புகள் பதிவு செய்யப்படவுள்ளன.

நடமாடும் சேவை நடைபெறவுள்ள திகதி, காலம் பொதுமக்களுக்கு கிராம அலுவலர்கள் மூலம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ஒ-175)

## கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை கடந்த திங்கட்கிழமைமுதல் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் அவற்றைக்கட்டி வளர்க்குமாறு பிரதேச சபை திட்டமிடற்பிரிவு கேட்டுள்ளது.

இதேவேளை- கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது 24 கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-185)

## கட்டாக்காலி ஆடுகளை இறைச்சிக்காக வெட்டும் கும்பல்

கோண்டாவில்,ஜூலை22

கோண்டாவில் கிழக்கு புனித செபஸ்தியார் கிராமத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடுகளைச் சிலர் பிடித்துச் சட்டவிரோதமாக இறைச்சிக்காக வெட்டிவருகின்றனர் என்று கூறபபடுகிறது.

ஆடுகளை இறைச்சிக்காக வெட்டிஎடுத்து விட்டு, கழிவுப் பகுதிகளை அந்த நபர்கள் வீதியில் வீசிவிட்டுச் செல்கின்றனர் என்றும் -

அந்தக் கழிவுகளை நாய்கள் இழுத்துச் சென்று ஆங்காங்கே போடுவதால் அப்பகுதியெங்கும் துர்நாற்றம் வீசுவதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அண்மையில் வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு ஒன்று இறைச்சிக்காக வெட்டப்பட்டு வீதியில் வீசப்பட்டுக் கிடந்ததாகக் கூறப்படுகின்றது. (ஒ-49)

## கோப்பாய் தரிசு நிலங்களில் பெருமளவில் பாதீனியம்

கோப்பாய், ஜூலை22

கோப்பாய்ப் பகுதி விவசாய நிலங்களை அண்டியுள்ள தரிசுக் காணிகளில் பாதீனியம் க்ளைகள் படர்ந்து பரவியுள்ளன. இதனால் விவசாய நிலங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு வருவதுடன் கால்நடைகளும் பாதிப்புறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாதீனியம் களைகள் கடந்த ஆண்டுகளில் பல்வேறு விவசாய அமைப்புக்களால் அழிக்கப்பட்டன. இவ்வருடம் இதனை அழிக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் கடந்த காலங்களில் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளும் வீணாகிப்போயுள்ளன. (ஒ-72)

## பஸ்சேவை இன்மையால் மாணவர்கள் அவதி

சங்கானை,ஜூலை22

மாதகலில் இருந்து சித்தன்கேணி, சங்கானை ஊடாகக் காலை நேரம் பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்படும் போக்குவரத்துச் சேவை இடம்பெறாததால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த 15ஆம் திகதிமுதல் இந்தப் பஸ் சேவை இடம்பெறாததால் மாணவர்கள் தனியார் பஸ்களிலும் வேறுவாகனங்களிலும் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் தம்மால் எடுக்கப்பட்ட மாதாந்த பருவச் சீட்டிற்கு எவ்வித பயனும் இல்லாதோடு, பாடசாலைக்கும் உரிய நேரத்தில் சமுகமளிக்க முடியாமல் உள்ளதாக மாணவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இது விடயமாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் கோண்டாவில் சாலையுடன் தொடர்பு கொண்ட போது பஸ் பற்றாக்குறை காரணமாகத் தம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவித்தனர். (10-29-204)

## தேசியப் பேரவையின் மாதாந்த சங்கமம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

தெல்லிப்பழை தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு நேற்று முனதினம் பிற்பகல் 3 மணியளவில் அளவெட்டி மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் இ.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட ஊடகப் பேச்சாளர் எஸ்.கனகலிங்கம், டாக்டர் ருக்குமணிதேவி, சங்கீதபூஷணம் வி.நடராசா மற்றும் மகேந்திரசர்மா ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றினர். தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்டச் செயலாளர் சூ.சிறில் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச சமூக அபிவிருத்திப் பணிகள் மற்றும் தேவைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் 15 ஊரகப்பிரிவு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (10-9)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி இராஜரட்ணம் பூலோகசிங்கம் என்பவருடைய தேசிய அ.அ.(இல.382881770V), சாரதி அனுமதிப்பத்திரம் 182608 என்பன நுணாவிலுக்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராசா கடை எனும் அம்பாள் ஸ்ரோர்ஸ, நுணாவிலில் ஒப்படைத்துதவவும். பூலோகசிங்கம். T.P:3170 (34360)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33வயது, அனுஷம் 3ஆம் பாதம் 8¾ பாவம், 8இல் செவ்வாய், லண்டனில் வதியும் மணமகனுக்கு லண்டனில் அல்லது கனடாவில் வதிவிட உரிமையுள்ள படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: Dr.K.V.துரைராஜா, இல.29,மூர்த்தவிநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (34295)

### தவறிவிட்டது

மீசாலை கிழக்கைச் சேர்ந்த செல்வி தீபா கதிரவேலு அவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு கடந்த 14.07.2004 புதன்கிழமை கொடிகாமம் பஸ் நிலையத்தில் மினி பஸ்ஸில் வைத்துத் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து கீழுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

கஜமுகன் Fancy House,
கண்டி வீதி, மீசாலை. T.P.: 077 6098987
(மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு அருகில்) (34363)(24)

## சிறைச்சாலைக் கைகலப்பு; இருவருக்கும் பிணை

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ்.சிறைச்சாலையில் கடந்த 15ஆம் திகதி சிறை அத்தியட்சகருக்கும், சிறைச்சாலை அலுவலர் ஒருவருக்கும் இடையே நடந்ததாகக் கூறப்படும் கைகலப்புத் தொடர்பான விசாரணை யாழ. மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அப்போது சிறைச்சாலை அத்தியட்சகரை 5ஆயிரம் ரூபா சொந்தப்பிணையிலும் அலுவலரை 3ஆயிரம் ரூபா சொந்தப்பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிபதி வழக்கை எதிர் வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஓ)

## சனிக்கிழமைகளில் பண்ணிசை வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜுலை22

வடஇலங்கைச் சங்கீத சபையினரின் பாடவிதானத்திற்கமைய இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

கொழும்புத்துறை மேற்கு, இலந்தைக் குளம் மன்றுளாடும் விநாயகப் பெருமான் ஆலய பரிபாலனசபையின் அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறைமன்றம் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4மணிமுதல் மேற்படி ஆலயத்தில் இலவச பண்ணிசை வகுப்புகளை நடத்தி வருகின்றது. வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் வகுப்புகள் நடைபெறும் நேரங்களில் தொடர்புகொள்ளுமாறு அகில இலங்கைத் திருமுறை மன்றம் கேட்டுள்ளது. (10-204)

## சாயி சிந்தனை

### இதயதர்மம் பொதுவானது



பகவத்கீதையில் 700 ஸ்லோகங்கள் இருக்கின்றன. முதல் ஸ்லோகத்தில் தர்மஷேத்ரே, குருஷேத்ரே என்று தொடங்கி, "தர்மம்" என்ற சொல்லே முதலில் காணப்படுகின்றது. கடைசி ஸ்லோகத்தின் கடைசி வார்த்தை "மம" என்பது. "மம தர்ம" என்ற இரண்டும் சேர்ந்தே பகவத்கீதை. உன் தர்மத்தை நீ கடைப்பிடி. அதுவே கீதையின் சாரம், அதுவே கீதையின் வடிவம். நீ பகவத்கீதையின் 700 ஸ்லோகங்களையும் படிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவற்றைப் படித்துத் தொண்டைவலி ஏற்படுத்தவும் வேண்டாம். மம தர்ம என்ற உன் கடமையை மட்டும் செய்து வா! கிரஹஸ்தனாக இருந்தால் கிரஹஸ்த தர்மத்தைச் செயலாக்கு! பிரம்மச்சாரியாக இருந்தால் உனக்குரிய தர்மத்தை நடைமுறைப்படுத்து. வானப்பிரகஸ்தனாக இருந்தால் அதற்குரிய தர்மம் நிறைவேற்றப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தமக்குரிய தர்மத்தை நிறைவேற்றுவதை விடச்சிறந்தது எதுவும் கிடையாது! ஆனால், இதய தர்மம் என்பது அனைவருக்கும் பொதுவானது. உங்கள் இதயம் முழுவதையும் அன்பால் நிரப்பிக் கொள்ளுங்கள்! அதில் எதுவும் குறையிருக்க வேண்டாம்! அன்புடன் இருக்கும்போது எதையும் சாதிக்கமுடியும்!

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## யாழ்.மத்திய பஸ் நிலையம் தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை.22

யாழ். மத்திய பஸ் நிலையத்தை விஸ்தரிப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் கொழும்பிலிருந்து வருகைதந்த நகர அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், யாழ். மாவட்ட நகர அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதில் மத்திய பஸ்நிலையத்தினை விஸ்தரித்து அதன்மூலம் பஸ்நிலையத்தை நவீனமயப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தின் பின் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் யாழ். பஸ்நிலையப் பகுதியினைப் பார்வையிட்டனர். (10-13-139)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 - 06 - 1914



மறைவு
03 - 08 - 2003

### அமரர் மண்டலம் இரத்தினம்

திதி: 22-07-2004

ஆண்டொன்று ஆயினும்
ஆறாதப்பா நம்துயர்
என்றும் உங்கள் நினைவு
பசுமையாய் எம்முடன்!

உங்கள் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (34336)(26-19-17-42)

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் நேசரத்தினம்



யாழ்ப்பாணம், மட்டுவில் வடக்கு, சிவன் கோயில் வீதி, சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் நேசரத்தினம் (நேசம்) 18-07-2004 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குப்புச்சாமி - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் ஞானசேகரம், கதிர்காமசேகரம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமிர்தலிங்கம் (இ.போ.ச., சிரேஷ்டசாலைப் பரிசோதகர், கோண்டாவில்), அரியமலர், அரியநாயகம் (புலோலி, ப.நோ.கூ.ச.), புவனேந்திரன் (கனடா), புவனேஸ்வரி, பாலகிருஷ்ணன் (கனடா), பிரபாகரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கமணி, சிவானந்தராசா, யோகேஸ்வரி, உருத்திராதேவி (கனடா), மனோகரன், இராஜேஸ்வரி (கனடா), சுகந்தமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் கபிலேந்திரன், பிரியதர்சினி, தபீசன், அகீபன், ஐங்கரன், நந்தினி, றோகன், சுகந்தினி (லண்டன்), அருள்குமரன், யசோதினி, சுஜீபன், மேனகா, சரண்யா, சகானா, பிரதீபன், பிறேமதர்சினி, பிரகாந்தன், அபிஷேக், அப்சரா, வவிதா, ஜெனுசியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கஜானனன், ஜனார்த்தனி, மயூரதன், டன்ஷிகா, அனுசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22-07-2004) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11மணியளவில் மட்டுவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மட்டுவில் வடக்கு,*
*சந்திரபுரம்,*
*சாவகச்சேரி.* (34329)(26-19-17-42)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
24 - 10 - 1936



மறைவு
22 - 06 - 2004

அமரர்

### விஸ்வலிங்கம் தம்பிஐயா

மீசாலை கிழக்கில் உதித்து
சாவகச்சேரி வடக்கில் வாழ்ந்து
பண்பாளனாய், பகுத்தறிவாளனாய்
மனிதரில் மாணிக்கமாய், மாந்தருள் திலகமாய்
ஊர்போற்ற வாழ்ந்து உதிர்ந்த
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (22.07.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சோலையம்மன் கோவிலடி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.* (C/36024)(43-17-[illegible]

## திருமலையில் கிராமியப் பாசறை

திருமலை,ஜுலை22

திருகோணமலை மாவட்டத்தில் அடிப்படைவசதிகள் அற்ற சந்தோஷபுரம் கிராமத்தில் கிராமியப் பாசறை இன்று வியாழக்கிழமை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

பின் தங்கிய அடிப்படை வசதிகள் அற்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பிரச்சினைகளை நேரில் அறிந்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்காகக் கிராமிய பாசறை என்ற நிகழ்வை விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல் துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த வகையில் முதலாவது கிராமியப் பாசறை இன்று முதல் மூன்று தினங்கள் சந்தோஷபுரம் கிராமத்தில் இடம்பெறவுள்ளது.

அரச அதிபர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தப் பாசறையில், கலந்துகொள்வர்.

மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடன் தீர்வு காணக்கூடியவற்றுக்குத் தீர்வைக்காணவும் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யவும் இந்தப் பாசறை பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (10-3)

## சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்.மாவட்ட சர்வோதயம் அமைப்பு யாழ். மாவட்டத்திலுள்ள 10 கிராமங்களின் சமூக சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

யாழ்.நகரத்தில் கொட்டடி, முஸ்லீம் தெரு உட்பட 10 கிராமங்களில் இக்கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. (10-30)

**துணிவகைப் பிறின்டிங்** - பெரிய அளவிலான பெனர்கள், ரை, ரீ-சேட் எம்போசிங் பிறிண்டிங் போன்றவற்றையும், **ஸ்கிறீன் பிறிண்டிங்** - நிறுவனங்களின் விளம்பரப் பெயர்ப் பலகைகள் (பிரபல ஓவியர் கோபால் பட்டாபி அவர்களின் பங்களிப்புடன்), பெரிய அளவிலான சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்கள், கலண்டர்கள், அழைப்பிதழ்கள், விசிற்றிங் காட் போன்றவற்றையும், **ஒவ்செற் பிறிண்டிங்** - புத்தகங்கள் (பிரபல ஓவியர் இராசையா அவர்களின் ஓவியப் பங்களிப்புடன்), சிட்டைப் புத்தகங்கள், நினைவு மலர்கள் போன்றவற்றையும் மற்றும் **லெற்றப்பிறஸ்** - வேலைகளையும் ஒரே இடத்தில் அழகுற அச்சிட்டுப் பெற்றுக்கொள்வதற்கு

NOBLE Printers
நோபிள் பிறிண்ரேஸ்

103, Palaly Road, Jaffna. Reg: NAL/DS/625 Mobile: 0777-145399

### கஜேந்திரன் எம்.பியின் உரையால் சபையில் குழப்பம்

# ஆளும் தரப்புக்கு ஆதரவாக ஹெல உறுமய செயற்பட வேண்டிவரும் என எச்சரிக்கை

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் உரையால் நேற்று முன்தினம் எதிர்க்கட்சிக்கூட்டணிக்குள் குழப்பம் ஏறபட்டது. சீற்றமடைந்த ஹெலஉறுமய, ஆளும் தரப்புக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டிவரும் என்று எச்சரித்தது. இதனால், நாடாளுமன்றத்தில் பதற்றமும், சலசலப்பும் ஏற்பட்டது.

13ஆவது நாடாளுமன்றம் ஐந்தாவது தடவையாக நேற்று முன்தினம் கூடியது. வழமையாக கடந்த நான்கு அமர்வுகளின் போதும் கூச்சல், குழப்பம், அடிதடி, ஓட்டம் என ஒரே ஆரவாரமாகவே நாடாளுமன்றம் கூடிக்கலைந்தது.

நேற்று முன்தினம் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடிய நாடாளுமன்றம் வழமைக்கு மாறாக அமைதியாகவும், ஒழுங்காகவும் காணப்பட்டது. வழமையாகக் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தும் ஜே.வி.பி.யினர் அமைதியாக அடங்கியிருந்தனர்.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கும் கட்டம் வந்தது.

முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன், உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவிடம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் அனுராபண்டாரநாயக்க அளித்த பதில் தடியைக் கொடுத்து அடியை வாங்கிக் கொண்டதுபோல்ஆகிவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி பிரதம கொரடவான மஹிந்த சமரசிங்க ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினர்.

வழமையாக வாய் மூலம் விடையளிப்பதற்கான கேள்விகளுக்கு 30 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்படவேண்டும். ஆனால், இன்று ஒரு மணி நேரம் கடந்துவிட்டது. நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

**பிரேரணை மீது விவாதம்**

இந்த சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையில் வாதங்கள் ஏற்பட்டன. எனினும், அதிமுக்கியமான ஒரு விடயம் விவாதத்திற்கு எடுக்கப்படவிருப்பதால் பதில் அளிக்கப்படாத கேள்விகளுக்கு பிறிதொரு தினத்தில் பதிலளிக்கலாமென சபாநாயகர் தீர்ப்பளித்து பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இதனால் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் கூட்டாக முன்வைத்த ஊடகச் சுதந்திரம் தொடர்பான பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது.

எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐ.தே.க. உறுப்பினரான லஷ்மன்செனவிரத்ன பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றினார்.

அவரது உரையில் ஜே.வி.பி.யினருக்கு ஆத்திரத்தை தூண்டிவிடக் கூடிய பல விடயங்களை அப்பட்டமாகக் கூறினார்.

"ஜே.வி.பி. அரசியலில் ஈடுபட ஆரம்பித்த காலம் முதல் ஊடகச் சுதந்திரம் பற்றியும், சுதந்திர ஊடக ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூச்சல் போட்டார்கள். ஆனால், ஜனாதிபதி ஜே.வி.பியினரையே உதாசீனப்படுத்தி ஓரம் கட்டி விட்டார்" என அவர் கூறினார். ஆனால், அப்போதும் கூட ஜே.வி.பி.யினர் அமைதியாகவே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்




அனுரா பண்டாரநாயக்கா மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல் பேசினார்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரச ஊடகங்களான இலங்கை வானொலி, இலங்கை ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக்ஹவுஸ் நிறுவனம் என்பன அரச கட்சிக்கு ஆதரவாக செயல்படுவதாகக் குற்றம் சுமத்துகின்றன.

"ஆனால், தனியார் ஊடகங்கள் - தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் அனைத்தும் - ஒட்டு மொத்தமாக எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன.

"இப்படியான நிலையில் அரச ஊடகங்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுவதில் எந்தப்பிழையும் இல்லை" என அரச ஊடகங்களின் செயற்பாட்டை நியாயப்படுத்தினார்.

மேலும், 'டட்லிசேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கடைப்பிடித்த வழியிலேயே அரச ஊடகங்கள் பயணத்தை தொடர்கின்றன.

"இன்று பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பாகப் பேசும் ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்கள் பதவியில் இருந்தபோது அரச ஊடகங்கள் சுதந்திரமாக செயற்படும் சட்டத்தை ஏன் கொண்டுவரவில்லை" - என்றும் கேள்வி எழுப்பினார்.

எதிர்கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவின் கூற்றுகளை நிராகரித்துப் பேசினர்.

அரச ஊடகங்கள் பக்கச் சார்பான முறையில் செய்திகளை வெளியிடுவதையும், எதிர்க்கட்சிகளுக்கு விரோதமாக செயல்படுவதையும் அவர்கள் கண்டித்தனர்.

"இந்த அரசு முன்னாள் அமைச்சர் ரவூப்ஹக்கீமை குமாரி குரே என்ற வாடகைப் பெண்ணைக் கொண்டு அவமானப்படுத்தியது.

"அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது சேறு பூசும் வகையில் செய்திகளை வெளியிட்டன. இந்த அரசு நாட்டு மக்களைத் தவறான வழியில் திசைதிருப்பும் வகையிலேயே அரச ஊடகங்களைப் பயன்படுத்துகின்றது" - என்றும் அவர்குற்றம் சுமத்தினார்.

காலையில் இருந்து அமைதியாகக் காணப்பட்ட சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உரையாற்றும் போது சற்று. சூடுபிடித்தது.

**கஜேந்திரன் எம்.பி.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யான கே.கஜேந்திரன் உரையாற்றும்போது சபையில் சலசலப்பும், பதற்றமும் ஏற்பட்டது.

ஊடகவியலாளர்களான நிமலராஜன், நடேசன் ஆகியோர் கொல்லப்பட்டதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பின்னணியில் இருந்துளளார் என்றும், தமிழ் இனத்துரோகியான கருணாவின் போசகரும் டக்ளஸ் தேவானந்தாவே என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

"இந்த அரசு சமாதானப் பேச்சுகளில் ஆர்வம் காட்டுவதாகப் பாசாங்கு செய்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பிரசாரங்களை மேற்கொண்டுவரும் ரி.பி.ஸி. லண்டன் சேவைக்கு அரசு மாதாந்தம் 9ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை வழங்கி வருகின்றது. இப்படியான நிலையில் எப்படி சமாதானம் ஏற்படும். மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் விபரீதமான விளைவுகள் ஏற்படும்" - என்று கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் உபயோகித்த சில வார்த்தைப் பிரயோகம் ஆளும் கட்சியினரையும், எதிர்க்கட்சியான [illegible] ஹெல உறுமய உறுப்பினர்களையும் சீற்றம் அடையச் செய்தன.

சூடான வாதங்கள் இடம் பெற்றன. ஆளும் கட்சி உறுப்பினரான மேர்வின் சில்வா தனது ஆசனத்தில் இருந்து எழுந்து முஷ்டியை முறுக்கிக்கொண்டு எதிர்க் கட்சியின் பக்கம் செல்ல முற்பட்டார். ஆளும் கட்சியின் முன்வரிசை அமைச்சர்கள் மேர்வின் சில்வாவை எதிர்க் கட்சிகளின் பக்கம் செல்ல விடாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜாதிக ஹெல உறுமய எம்.பி.யான வண.அத்துரெலிய ரத்ன தேரர் ஆத்திரம் அடைந்த நிலையில் எழுந்து தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கஜேந்திரன் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் பாரதூரமானவை. இப்பேச்சு எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்திற்கு வேட்டு வைத்துவிடும். இந்த நிலை தொடர்ந்தால் எதிர்க்கட்சிக் கூட்டில் இருந்து வெளியேறி, ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டியநிலை எமக்கு ஏற்படலாம்" - என்று எச்சரிக்கை செய்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் கஜேந்திரன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் பதிவேட்டில் இருந்து நீக்கப்படவேண்டும் என்று கூச்சலிட்டனர். அப்போது சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித்தலைவர் எம். சச்சிதானந்தன் சபையில் அமைதியை ஏற்படுத்தப் பெரிதும் சிரமப்பட்டார். அதேவேளை, விவாதத்துடன் தொடர்பில்லாத எல்லாவிடயங்களையும் பதிவேட்டில் இருந்து நீக்கும் படியும் அவர் உத்தரவிட்டார்.

**ரவிராஜ் எம்.பி.**

தொடர்ந்து ரவிராஜ் எம்.பி ஆற்றிய உரை அடிபட்டவர்களுக்கு ஒத்தடம் கொடுப்பது போல அமைந்தது.

ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் சுயநிர்ணயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கை. இதில் மாற்றம் இல்லை என்று அவர் கூறினார். அதேவேளை, தனது சகாவான கஜேந்திரனின் உரைதவறாக அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது. அவர் விளக்கம் அளிக்க சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்று கேட்டார்.

ரவிராஜ் எம்.பி.உரையாற்றியபின் கஜேந்திரன் எம்.பிக்கு ஒருநிமிடம் பேச இடமளிக்கப்பட்டது.

தான் எந்த ஒரு தவறான நோக்குடனும் பேசவில்லை என்றும் ஏற்கனவே பலஆயிரம் உயிர்கள் பலியிடப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால், இப்படியான நிலை ஏற்படக்கூடாது என்ற அர்த்தப்படவே கூறினார் எனக்கூறி விளக்கம் அளிக்க முயன்றார் அவர். எனினும், அவகாசம் போதவில்லை. ஒரு நிமிடம் முடிந்துவிட்டது.

இறுதியாக பிரதி ஊடகத்துறை அமைச்சர் விவாதத்திற்குப்பதில் அளித்தார். எதிர்க்கட்சிகள் அரச ஊடகங்கள் மீது மட்டும் குற்றம் சுமத்துகின்றனர். இவர்கள் தனியார் ஊடகங்களைப் பற்றி சிந்திக்கத் தவறி விட்டனர். அவைபற்றியும் கரிசனை செலுத்த வேண்டும் - என்றார். (க)

## சமாதானத்துக்கே வேட்டு வைக்கிறது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

கொழும்பு,ஜூலை22

அரச ஊடகமான இலங்கை வானொலியே சமாதானப் பேச்சுக்கு ஆப்பு வைக்கிறது; வேட்டுவைக்கிறது.

- இவ்வாறு குற்றம் சுமத்தினார் ஐ.தே. கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியான தி.மகேஸ்வரன்

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரச ஊடகங்கள் அனைத்தும் இன்று ஆளும் கட்சியின் ஊடகப் பிரிவை போன்றே செயற்படுகின்றன. தேர்தல் காலத்தில் தனது எதிரணிக் கட்சிகள் மீது சேறு பூசுவதற்காகவே, நாம் ஆட்சியில் இருக்கும்போதே ஊடக அமைச்சை ஜனாதிபதி தட்டிப் பறித்துக்கொண்டார். - என்றும் மகேஸ்வரன் நேற்று நாடாளுமன்றத்தில் குற்றம்சுமத்தினார்.

ஊடகச் சுதந்திரம் தொடர்பாக நடைபெற்ற விவாத்தின்போது உரையாற்றிய மகேஸ்வரன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

இன்றைய அரசு சமாதானப் பேச்சை முன்னெடுப்போம் என்று தம்பட்டம் அடிக்கின்றது.

ஆனால், இலங்கை வானொலி சமாதானப் பேச்சுக்கு ஆப்பு வைக்கும் வகையில் செயற்படுகின்றது. லண்டனில் இருந்து ஒலி பரப்பப்படும் ரி.பி.ஸி. நிறுவனத்தின் செய்திகள் இலங்கை வானொலியில் மறு ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன.

இச்செய்தி அறிக்கைகள் முற்றுமுழுதாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சமாதானப் பேச்சுகளுக்கும் விரோதமானவையாகவே இருக்கின்றன. இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தேசிய ஒற்றுமைக்கே குந்தகம் ஏற்படுத்தும் ஒரு செயலாகும்.

நாட்டு மக்களுக்கு நடு நிலைச் செய்திகளை வெளியிடவேண்டிய அரச ஊடகங்கள், எதிர்கட்சி உறுப்பினர்கள் மீது தனிப்பட்ட முறையில் அபாண்டமான - உண்மைக்கு மாறான - குற்றங்களைச் சுமத்திச் செய்திகளை வெளியிடுகின்றன.

குமாரி குரே என்பவரைக் கொண்டு ஸ்ரீல.மு. காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தின.

மாகாண சபைத் தேர்தலின்போது முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது சேறுபூசின.

பொய்யான தகவல்களைச் செய்தி அறிக்கையாக வெளியிட்டன.

பொலீஸாரின் செயலைக் கோட்டை நீதிவான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க அரசிடம் எதுவும் இல்லை.

இப்பொழுது நாம் ஊடகச் சுதந்திரம் தொடர்பாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே ஜனாதிபதியின் தூண்டுதலின் பேரில் ரி.என்.எல். ஊடக நிறுவனத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்து தேடுதல் நடத்துகின்றனர். இதுவா ஜனாதிபதியின் ஊடகச் சுதந்திரம்?

அமைச்சர் அனுரா பண்டார ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றிக் குறைகூறுகின்றார். அவருக்கு ரணிலைப் பற்றிக் குறைகூற எந்த அருகதையும் கிடையாது.

அடுத்தடுத்து மூன்று தேர்தல்களை நடத்தி 18ஆயிரம் கோடி ரூபாவை ஜனாதிபதி வீணடித்துவிட்டார்.

இப்பொழுது இந்த அரசு தனது ஆயுளின் நாள்களை எண்ணிக்கொண்டிருக் கின்றது. கூடிய விரைவில் ஒரு பாடம் புகட் டுவோம் - என்றும் மகேஸ்வரன் எம்.பி. கூறினார். (க)

## சாய்ந்தமருதில் இளம்பெண் சுட்டுக் கொலை!

கல்முனை,ஜூலை22

சாய்ந்தமருதில் இளம் பெண் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம்அதிகாலை மூன்று மணியளவில், சாய்ந்தமருது பொதுச் சந்தை வீதி, 5ஆம் குறுக்குத் தெருவில் இடம்பெற்றிருக்கிறது.

அப்துல் மஜித் நிஸாயா(வயது25) என்னும் திருமணமாகாத பெண்ணே சுட்டுக்கொல்லப் பட்டவராவார். இவர் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையில் உதவியாளராகப் பணியாற்றி வருபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண், தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில், வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் எனக் கல்முனைப் பொலீஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி டபிள்யூ.சி. விஜயதிலக தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் தாம் வந்த மோட்டார் சைக்கிளிலேயே தப்பிச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சாய்ந்தமருதைச் சேர்ந்த மீராலெப்பை அஸீஸ், சீனிமுகமத் நிசார் ஆகிய இருவரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். விசாரனை தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் பொலீஸ் பொறுப்பதிகாரி சொன்னார்.

அதேவேளை, சந்தேகநபர்கள் இருவரையும் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலீஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தனர்.(க)

## விபத்தில் காயமுற்ற இருவரும் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஜூலை22

உரும்பிராயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய யாழ். நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நவநீதராசா (வயது-26), சைக்கிளில் சென்ற உரும்பிராயைச் சேர்ந்த கிட்டினபிள்ளை சந்திரன் (வயது-45) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.(ஒ-15)

# மறந்துவிட நினைப்போமோ? மறுபடியும் வருவாயோ?



## வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஆஷா)

| தாய் மடியில் 11. 01. 1969 | தாயக மண்ணில் 22. 07. 1989 |
|---|---|

அன்று நடந்தபோது எம் ஆவி துடித்தது!
இன்றும் நினைக்கையில் எம் நெஞ்சு வலிக்குது?
கூடப் பிறந்துவிட்ட எங்கள் உதிரமே - உனை
மறந்துவிட நினைப்போமோ? மறுபடியும் வருவாயோ?

உன் எண்ணமே சுமைகளாய் எம் இதயமே பாரமாய்
தவிக்கிறோம் - அழுகிறோம், தாளாமல் துடிக்கிறோம் -
உன்பிரிவு
எம் நெஞ்சில் பொங்கி. சோகங்கள் சொந்தம் கொண்டாட
மறந்துவிட நினைப்போமோ? மறுபடியும் வருவாயோ?

கண்ணீர் கலங்கி கண்ணில் இறங்கி
நெஞ்சில் விழுகுதடா சொந்தம் நீயென்று!
கலங்கிய எம் கண்களில் உறங்காத உன் ஞாபகம்
மறந்துவிட நினைப்போமோ? மறுபடியும் வருவாயோ?

ஈரேழு ஜென்மங்கள் எங்கே பிறந்தாலும் எப்பிறப்பெடுத்தாலும்
நாம் ஒரு கொடியில் மலர உனைத்தினம் பிரார்த்திக்கின்றோம்
எம் பாசங்களும் பந்தங்களும் பிரித்தாலும் பிரியாதது
காலங்களும் நேரங்களும் கலைத்தாலும் கலையாதது

மறந்துவிட்டீர்களோ? என்று அழகன் உன் அண்ணன்
கேட்டான்
மறப்போமோ? மறப்போமோ? மரணத்திலும் மறப்போமோ?
ஈரேழு ஜென்மங்கள் எங்கே பிறந்தாலும்-எப்படிப் பிறந்தாலும்
நாம் ஒரு கொடியில் மலர உனைத்தான் பிரார்த்திக்கின்றோம்.

**உன்னைப் பெற்றவர்கள்,**
**உன்னுடன் பிறந்தவர்கள்,**
**உன்னுடன் வாழ்ந்தவர்கள்.**

சாவகச்சேரி. (34346) (34-14-13)


**YAMAHA** *Touching Your Heart*

## பணத்தினால் அளவிட முடியாததொன்று இலவசம்



**YAMAHA** மோட்டார் வள்ள (OBM) இயந்திரம்
தற்போது புதுப் படிமுறைகள் உள்ளடக்கிய மெக்கானிக்குகளுக்கான
**விசேடமான பயிற்சி நெறி**
யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் நடைபெறும்.

**பங்குபற்றுபவர் சகலருக்கும் இலவசம்**

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
பயிலுனர்களுள் சிறப்பாக பயிற்சியை மேற்கொள்பவர்களுக்கு கருவிகள் வழங்கப்படும்.

**விண்ணப்பதாரர்கள்**

- 20 - 50 இடைப்பட்ட இலங்கையர்கள்.
- இலங்கையில் வதிவிடமாகவும், தொழில் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- பயிலுனர்கள் நிரந்தரமாக ஓரிடத்தில் தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும்.
- குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் மோட்டார் இயந்திர துறையில் அவசியமாகும்.

**AOTS - ஜப்பான், YAMAHA ஜப்பானின் நிறுவனம், அசோசியேட் மோட்டார் லங்கா கம்பனி**

பயிலுனர்களுக்கான பூரண அனுசரணையினை ஜப்பானிய விசேட குழுவினர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படும்.

**யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 24 - 28**
**திருகோணமலையில் ஆகஸ்ட் 31 - செப்டெம்பர் 04**

உங்களின் விண்ணப்பங்களை ஜூலை 31 ம் திகதிக்கு முன்பதாக எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.

**AML** அசோசியேட்டட் மோட்டார் லங்கா கம்பனி
"யமஹா கோனர்" - 14/9 ஸ்ரீ ஜினரத்ன மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி: 2304231, 2304232, 011 4718603. பெக்ஸ்: 94 11 2304266

மேலதிக விபரங்களை பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்: தமில் — 0777 443900

CREATIVE CONCEPTS

# காஷ்மீர் மாநிலத் துணை முதல்வரை இலக்கு வைத்து தொடர் தாக்குதல்கள்

ஸ்ரீநகர்,ஜூலை22

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தீவிர வாதிகள் அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடு பட்டு வருகிறார்கள்.

தற்போது தீவிரவாதிகள் மாநிலத் துணை முதல்வர் மஸ்கத் ராம் சர்மாவுக்குக் குறி வைத்து இருக்கிறார்கள். கடந்த வாரம் அவர் காரில் சென்ற போது தீவிரவாதிகள் வெடிகுண்டு வீசித் தாக்கினார்கள். இதில் அவர் அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பினார்.

தற்போது மங்கத்ராம் சர்மாவைத் தீவிர வாதிகள் மீண்டும் கொல்ல முயற்சி செய்த னர். நேற்றுமுன்தினம் அவர் அனந்த நாக் மாவட் டத்தில் கப்ரான் கிராமத்தில் காங்கிரஸ் சார்பில் ஏற்பாடுசெய்யப்பட்டு இருந்த பொதுக்கூட் டத்தில் கலந்துகொண்டார். அவருடன் அமைச்சர் கள் முஹமத் ஷெரீப் நியாங், குலாம் அஹ மத் மிர் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

அப்போது ஜீப்பில் வந்த தீவிரவாதிகள் திடீர் என்று பொதுக்கூட்ட மேடையை நோக்கி வெடிகுண்டுகளை வீசினார்கள். இதில் துணை முதல்வர் மங்கத்ராம் சர்மா காயமின்றித் தப்பி னார். குண்டுவெடிப்பு நடந்ததும் பாதுகாப்பு அதி காரிகள் அவரைச் சூழ்ந்துகொண்டு காரில் அழைத்துச்சென்று விட்டனர்.

இக்குண்டு வீச்சில் 3 பேர் அதே இடத்தில் உடல் சிதறிப் பலியாகினர்; 40இற்கும் மேற் பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக் குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு மேலும் 2 பேர் சிகிச்சை பயனின்றி இறந்தார்கள்.

அமைச்சர்கள் முஹமது ஷெரீப் நியாஸ், குலாம் அஹமத்மிர், மாநில காங்கிரஸ் துணைத் தலைவர் அப்துல் கனி வகீல் மற்றும் 6 உயர் அதிகாரிகளும் இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்தனர்.

கடந்த ஒரு வாரத்தில் மங்கத்ராம் சர் மாவைக் கொல்லமுயற்சி நடந்து இருப்பது இது 2ஆவது முறையாகும். (ஒ)

## திருவனந்தபுரத்தில் மழை; வெள்ளம்

திருவனந்தபுரம்,ஜூலை22

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் விடிய விடிய மழை பெய்தது. இதில் தம்பானூர் கிழக்கு கோட்டை, பாப்பனங் கோடு ஆகிய பகுதிகளில் உள்ள பஸ், ரெயில நிலையங்கள் தண்ணீரில் மூழ்கின. பல இடங் களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இநத மழையில் 500 இற்கும் அதிகமான வீடு கள் முழுமையாகத் தண்ணீரில் மூழ்கின. (ஒ)

## வடிவேலு நடிக்கத் தடை

கொடைக்கானல்,ஜூலை22

நடிகர் வடிவேலுவை வைத்துப் படம் எடுக்க மாட்டோம் என்று திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மறைந்த தயாரிப்பாளர் ஜீவியிடம் 'சொக்கத் தங்கம்' படத்தில் நடிக்க வடிவேலு ரூ.2 லட்சத்து 50ஆயிரம் (இந்தியப் பணம்) முற்பண மாக வாங்கினார். ஆனால் வடிவேலு அந்த படத்தில் நடிக்கவில்லை. ஜீ.வீயும் இறந்துவிட் டார் இப்போது ஜீ.வியின் மனைவி பணத்தைத் திருப்பித்தருமாறு கேட்டதற்கு வடிவேலு மறுத்துவிட்டார். இது தயாரிப்பாளர் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து வடிவேலுவை வைத்து திரைப் படம் எடுப்பது இல்லை என்று சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஒ)

காஷ்மீர் மாநிலத் தில் ஸ்ரீநகர் அருகே கந்த் என்னுமிடத் தில் பஸ் ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 15 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்த னர். இக்கொடூரச் சம்பவத்தில் கவிழ்ந்த பஸ்ஸைப் படத் தில் காணலாம்.



# நடிகையுடன் சேர்ந்து வாழ கணவர் நீதிமன்றில் மனு!

சென்னை,ஜூலை22

நடிகை சுவர்ணமால்யாவைத் தன்னுடன் சேர்த்துவைக்கக்கோரி சென்னை குடும்பநல நீதிமன்றத்தில் அவரது கணவர் அர்ஜுன ராஜாராம் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் 'தொகுப் பாளராக இருந்து வந்தார் நடிகை சுவர்ண மால்யா, விஜயகாந்தின் தங்கையாக 'எங் கள் அண்ணா' படத்திலும், 'அலைபாயுதே' படத் திலும் நடித்தார். இவருக்கும் சென்னை யைச் சேர்ந்த அர்ஜுன் ராஜாராம் என்பவருக் கும் கடந்த 2002ஆம் ஆண்டு ஜுன் 30ஆம் திகதி திருமணம் நடந்தது. அமெரிக்காவில் பணிபுரிந்துவந்தார் அர்ஜுன். திருமணத்துக் குப்பிறகு சுவர்ணமால்யாவுடன் அர்ஜுன் அமெரிக்கா சென்றார். சில மாதங்களுக்குப்



பிறகு இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட் டது. தற்போது பெங் களூரில் அர்ஜுன் பணிபுரிந்து வருகி றார். சென்னையில் சுவர்ணமால்யா உள் ளார்.

தன்னுடன் சேர்ந்து வாழ சுவர்ணமால் யாவுக்கு உத்தர விடக்கோரி சென்னை குடும்பநல நீதிமன் றத்தில் அர்ஜுன் மனுத்தாக்கல் செய்துள் ளார். (ஒ)

# நீதிமன்றத்தை ஏமாற்றியதாக நடிகை சுகாசினிக்குக் கண்டனம்

பூந்தமல்லி,ஜூலை22

திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் வீட்டில் வெடிகுண்டு வெடித்த வழக்கில் சாட்சியாகச் சேர்க்கப்பட்ட அவரது மனைவி நடிகை சுகா சினியும், அவரது வீட்டுவேலைக்காரப் பெண் ணும் தொடர்ந்து நீதிமன்றுக்கு வராமல் காலம் கடத்தி வருவதை அடுத்து அவர்கள் இருவரும் கண்டிப்பாக நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தியுள் ளது.



கடந்த 1996 ஆம் ஆண்டு மே மாதம் சென்னை தேனாம்பேட்டை யில் உள்ள திரைப்பட இயக் குநர் மணிரத் தினம் வீட்டில் காலை நேரத் தில் சிலர் வெடி குண்டுகளை வீசி விட்டுச் சென் றனர். இது குறித்து சி.பி.சி. ஐ.டி.பொலீஸார் விசாரணை நடத்தி, 4பேரைக் கைதுசெய தனர். இது தொடர்பான வழக்கு விசாரணை பூந்தமல்லியில் உள்ள வெடிகுண்டு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றில் நடந்து வருகின்றது. இதுவரையில் இந்த வழக்கில் 7பேர் சாட்சியம் அளித்துள்ளனர். இந்த வழக்கில் முக்கிய சாட்சியாகச் சேர்க்கப்பட்டு இருந்த வெடிகுண்டு நிபுணர் விஜயகுமார் என்பவர் கடந்த வாரம் ஆஜராகி சாட்சியம் அளித்தார்.

இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளாக திரைப பட நடிகையும், மணிரத்தினத்தின் மனைவியு மான சுகாசினி, அவரது வீட்டு வேலைக்காரப் பெண் கமலா ஆகியோர் உள்ளனர். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட நாளில் இருந்து இவர்கள் இருவரையும் ஆஜராகக்கோரி அழைப்பு அனுப்பப்பட்டு வரு கிறது. இதுவரையில் 10இற்கும் மேற்பட்ட அழைப்பாணைகளைப் பெற்றுக்கொண்ட நடிகை சுகாசினி, நீதிமன்றில் ஆஜராகாமல் காலம் கடத்திவருகிறார். இதனால் இந்த வழக்கு விச ாரணை தள்ளிப் போவதாக நீதிமன்று கருதி யது. இதைத் தொடர்ந்து சுகாசினியும், கமலா வும் நீதிமன்றில் நேரில் ஆஜராக வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தி.மு.க. தலைமையக முன்நிலத்தை காப்பாற்றக் கருணாநிதி மனு

சென்னை,ஜூலை22

தமிழகத் தலைநகர் சென்னையில் தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவால யத்தின் முன்பகுதியில் உள்ள வெறும் நிலத் தைப் பூங்காவாக அறிவித்து தமிழக அரசு வெளியிட்ட உத்தரவை எதிர்த்து தி.மு.க. தலை வர் மு.கருணாநிதி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தி.மு.க. அறக்கட்டளையின் நிறுவுநர் மற் றும் நிர்வாகி என்ற முறையில் இந்த மனுவைக் கருணாநிதி தாக்கல் செய்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

மனையின் மொத்தப் பரப்பில் 10 சதவீத நிலத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண் டும் என்ற விதியிலிருந்து தி.மு.க. அறக்கட்ட ளைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை 1988 ஆம் ஆண்டு இந்த விதிவிலக்கை அளித்தது.

வெறும் இடத்தில் பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கப் பட்டது. அதன்படி, அண்ணா அறிவாலயத்தற்கு வடக்கு மூலையில் வெறும் இடம் ஒதுக்கப்பட் டது. அங்கு அறிஞர் அண்ணா பொழுதுபோக்குப் பு,ங்கா அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஆளுங்கட்சியினர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சட்ட விரோதமாக நடவடிக்கை எடுத்துள்ளது அரசு.

அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்த நாளில் இருந்தே தி.மு.க. தலைவர்களையும் தொண் டர்களையும் பல்வேறு வழிகளில் துன்புறுத்தி வருகின்றது. தி.மு.க. தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடத்தைக் கையகப்படுத்தத் தற் போது நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசின் உத்தரவுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று தனது மனுவில் கூறியுள்ளார் கருணாநிதி.

அண்ணா அறிவாலயத்தின் முன்புறமாக உள்ள வெற்று நிலம் மாநகராட்சிக்குச் சொந் தமானது என்று அறிவிக்கப்பட்டு அப்பகுதி கையகப்படுத்தப்பட்டமை தெரிந்ததே. சென்னை மாநகராட்சி மேஜர் பதவி அ.தி. மு.க. வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சோரனுக்கு நீதிமன்று பிடியாணை

ராஞ்சி,ஜூலை22

கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட் டுள்ள மத்திய அமைச்சர் சிபு சோரனைக் கைதுசெய்ய ஜார்க்கண்ட் மாநில பொலீஸ் குழு நேற்றுச் செவ்வாய்க்கிழமை டில்லி சென்றது.

இக்குழுவில் மூன்று பொலீஸார் இடம்பெற் றுளளனர். ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள ராஞ்சி நகரிலிருந்து இக்குழுவினர் பிடியாணையை எடுத்துச் சென்றுள்ளனர்.

1975ஆம் ஆண்டு ராஞ்சி அருகேயுள்ள சிருத்திக் என்ற இடத்தில் 11பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சிபு சோரன் உள் ளிட்ட 10 பேருக்கு ஜம்தாரா நீதிமன்றம் கடந்த சனிக்கிழமை பிடியாணை பிறப்பித்தது. (ஒ)

## நடிகர் ராஜ்குமார் மருத்துவமனையில்!



பெங்களூர்,ஜூலை22

பிரபல கன்னட நடிக ரும், வீரப்பனால் கடத் தப்பட்டு பின்பு விடுவிக் கப்பட்டவருமான ராஜ்குமார் உடல்நலக்குறைவு காரண மாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை வீட்டிலிருந்த நடிகர் ராஜ் குமாருக்கு திடீரென உடம்பு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. இதையடுத்து உடனடி யாகப பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவ மனை ஒன்றில் ராஜ்குமார் சேர்க்கப்பட்டார். அங்கு அவருககுப் பரிசோதனை செய்யப்பட் டது. பின்பு ராஜ்குமாரைப் படுக்கையில் முழு ஓய்வு எடுக்கும்படி மருத்துவர்கள் அறிவுறுத் தினர். அவரது உடல நிலையை மருத்துவர் கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வரு கின்றனர். மேலும், சில நாள்களுக்கு நடிகர் ராஜ்குமார் மருத்துவக் கண்காணிப்பில் இருப்பார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்தியச் செய்திகள்

# பாதிரியாரின் குடும்பத்தவருக்கு நஷ்டஈடு கோர உரிமையில்லை

### கேரள நீதிமன்றம் தீர்ப்பு

திருவனந்தபுரம்,ஜூலை22

கேரள மாநிலம் மூவாற்று புழையில் ஒரு தேவாலயத்தில் பாதிரியாராக இருந்தவர் ஜோஸ். இவர் கடந்த 1995ஆம் நடந்த ஒரு வாகனம் மோதிப் பலியாகிவிட்டார். இதனை யடுத்து கிறிஸ்தவ ஆலய நிர்வாகிகளும் பாதிரி யாரின் பெற்றோர்களும் நஷ்டஈடு கோரி நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கில் இந்தியப்பணத்தில் ஒரு லட்சத்து 3 ஆயிரத்தை ஆலய நிர்வாகத்திற்கு வாகன உரிமையாளர் நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இதனையடுத்து பாதிரியாரின் பெற்றோர் நஷ்ட ஈட்டைத் தமக்குத் தரும்படி கோரி மேன் முறையீடு செய்தனர்.

ஒருவர் துறவியாக மாறிவிட்டால் அவர் தனது வாழ்க்கையை விட்டுவிட்டதாகத்தான் அர்த்தம். அவர் பாதிரியார் ஆனபிறகு அவர் மூலம் அவரது குடும்பத்திற்கு வருமானம் ஒன்றும் கிடைக்காது.

எனவே, அவரது மரணத்தின் மூலம் கிடைத்த நஷ்டஈட்டைப் பெற அவரது பெற்றோருக்கு உரிமை கிடையாது. ஆகவே, அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை அவர் பாதிரியாராக இருநத தேவாலயத்திற்குக் கொடுக்கலாம் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. (ஒ)

# இருபெண்கள் உட்பட மூன்று இலங்கையர்கள் இராமேஸ்வரத்தில் கைது!

இலங்கையில் இருந்து படகில் இராமேஸ் வரம் வந்த பெண்கள் உட்பட 3 இலங்கை யரைப் பொலீஸார் கைதுசெய்தனர்; ஒரு பெண உட்பட 6பேர் தலைமறைவாகிவிட்டனர்.

இராமேஸ்வரம் ஓலைக்குடா கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலையில் சுற்றிக் கொண்டிருந்த ஒருவரை இராமேஸ்வரம் பொலீஸார் பிடித்தனர். இவரிடம் விசாரித்த தில், இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபாகரன் என்பதும் இலங்கை செல்வதற்காகப் பணம்கொடுத்துப் படகில் செல்ல இராமேஸ் வரம் வந்ததாகவும் தெரிவித்தார். பொலீஸார் இவரைக் கைதுசெய்தனர்.

இந்தநிலையில், ஓலைக்குடா கடற்கரைப் பகுதியில் இலங்கை அகதிகள் மறைந்திருப்ப தாகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது. பொலீஸார் ஓலைக்குடா கடற்கரைப் பகுதிக்குச் சென்றனர். அங்கு மறைந்திருந்த 2 பெண்கள் உட்பட 3பேரைப் பிடித்தனர். விசாரணையில் அவர்கள் இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகேஸ்வரன மஞ்சுளா மற்றும் திருகோணமலை யைச் சேர்ந்த சுபாஷினி என்றும், கடத்தல் படகு மூலம் ராமேஸ்வரம் வந்ததும் தெரியவந்தது.

இலங்கை பேசாலையில் இருந்து நேற்றுமுன தினம் இரவு 9மணிக்கு ஒரு படகில் 3 பெண் கள் உட்பட 6பேர் புறப்பட்டு வந்ததாகவும் அதிகாலை 3மணிக்கு ஓலைக்குடா கடற்கரை யில் 9பேரையும் இறக்கிவிட்டு படகு திரும் பிச்சென்று விட்டதாகவும் அவர்கள் தெரிவித்த னர். மூவரையும் பொலீஸார் கைது செய்தனர். தலைமறைவான 6 பேரையும் பொலீஸார் தேடி வருகின்றனர். (ஒ)

மீண்டும் யாழ். நகரில் முன்னணி வரிசையில்!!

ஈழத்தின் தலைசிறந்த இசையமைப்பாளர்கள்
**ஸ்ரீகுகன், சிவராம்** ஆகியோரின் நவீன இசையில்
முன்னணிப் பாடகர்கள்
**ஜெயா சுகுமார், S.நிரோஜன்** ஆகியோருடன்
பல இளம் பாடகர்களும், இசைக்கலைஞர்களும் கலந்து கலக்கும்

## ஸப்தஸ்வரா இசைக்குழு

தொடர்பு:- ஸ்ரீகுகன், விநாயகர் வீதி, கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் அருகில், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

ஸ்ரீகுகன்:077 6146345
சிவராம்: 077 6146393
நிரோஜன்: 0777 262405

(34324) (33-13-24)

## நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி

DAY CLASS
PAPER CLASS

A/L 2005 இணைந்த கணிதம்
திரு.B.ரவீந்திரன் நடைபெறுகின்றது.
சனி, ஞாயிறு 6-8
இரசாயனம் திரு.அன்பழகன்

| | |
|---|---|
| செவ்வாய் | 4.30-6.00 p.m. |
| புதன் | 10-12 a.m. |
| வியாழன் | 10-12 a.m. |

(34334)(34-13-24)

# 'அழகெழல்' போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலைமன்றம் பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் 'அழகெழல்' கலைத்துறைசார் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றும் இப்போட்டியானது கீழ்ப்பிரிவு, இடைநிலைப் பிரிவு, உயர்தரம் என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

24ஆம் திகதி காலை 9 மணிக்கு கிராமிய இசை, கிராமிய நடனம் என்பனவும் மறுநாள் சிறுவர் நடனம் மற்றும் சகல பிரிவுகளுக்குமான சித்திரம் வரையும் போட்டியும் இடம்பெறும்.

போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும். (10-6)

கொழும்பு றோயல் கல்லூரி
இந்து மாணவர் மன்றம் நடத்தும்
அகில இலங்கை
## சமயத்திறன் காண் போட்டிகள் - 2004

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் 49ஆவது தடவையாகக் கலைத்தாய்க்கு மகுடம் சூட்டும்முகமாக நடத்தும் கலைமகள் விழா - 2004இனை ஒட்டி சமயத்திறன் காண் போட்டிகளை எதிர்வரும் (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை நவரங்க ஹல மண்டபத்தில் நடத்த எண்ணியுள்ளது.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

செயலாளர்,
றோயல் கல்லூரி இந்துமாணவர் மன்றம்,
றோயல் கல்லூரி, கொழும்பு - 07.
தொலைபேசி:
011271377, 0785 120400

(சி-36062) (24-14-16)

## கோடைகால ஜில் சொப்பிங்

✦ முகூர்த்தப்பட்டுச் சாறி வகைகள்
✦ வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
✦ சாறி வகைகள் ✦ சேட், T.சேட் ✦ சூட் வகைகள்
✦ ஜம்பர்வகைகள் ✦ ரவுசர் துணிவகைகள் ✦ கவுண் வகைகள்
✦ டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் ✦ கோட் சூட்
✦ ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் ✦ பேபி கவுண் வகைகள்
போன்றவற்றை

தரமாகவும் மலிவாகவும்

பெற்றுக்கொள்ள,
**மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்** T.P.: 0214590174

இல.10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி-36658) (24-14-16)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை22

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் திருமதி அ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ந. ஜெகதீசனும் கலந்து கொள்வர். (10-204)



16, கில்னர் லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அமரர்
## நடராசா தயாளன் (சூரன்)

பிறப்பு: 28. 04. 1981
இறப்பு: 23.06.2004

நல்ல மனங்களில் நன்றாயுறைந்திடும் எமது இல்லத் தலைவனே! தயாளனே! சூரனே! உங்கள் ஆத்மாசாந்தி அடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

நேற்று (21-07-2004) புதன்கிழமை காலை 8மணியளவில் கீரிமலையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்றது. நாளை (23.07.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

(34350)(32)

### சிற்றிபோய் ரெயிலர்ஸ் நிறுவனத்திற்கு தையல் ஆள் தேவை

ஆண்களுக்கான ஆடை தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை.
உடனே நேரில் வரவும்.
தொடர்பு:
**சிற்றிபோய் ரெயிலர்ஸ்**
5, கே.கே.எஸ். வீதி,
(சத்திரத்துச்சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.

(34318)(42-19-13-24)

### 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 27 ✝ 12 ✝ 1969 |  | 22 ✝ 07 ✝ 1990 |

செல்வன்
## தெய்வேந்திரம் மகேந்திரம்
(மகா)

என்றும் உங்கள் பிரிவைத் தாங்க முடியாத:
உங்கள் அப்பா, அம்மா, சகோதரங்கள்
வட்டுக்கோட்டை. (34311) (32-13-24)

## சந்நிதியான் ஆச்சிரமம்
# சிறப்பு இசை அரங்கம்

23.07.2004 - வெள்ளி மு.ப. 10 மணி
லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் லண்டன் பாரதீய வித்தியாபவன்
திருமதி சிவசக்தி சிவநேசன் அவர்களின் மாணவிகள்





செல்வி **அகிலா இராமகிருஷ்ணன்**
செல்வி **மிதிலா இராமகிருஷ்ணன்**
அவர்களின் இசைக் கச்சேரி
வயலின் - இசைஞான திலகம் திரு.V.R.ராதாகிருஷ்ணன்
மிருதங்கம் - கலாவித்தகர் திரு.S.துரைராஜா
கடம் - கலாவித்தகர் திரு.M.மாதவன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்
கலை பண்பாட்டுப் பேரவை.

தொண்டைமானாறு.

(34316)(34-13-24)

## College of Information System
200 (500), Kasthuriyar Road,
Jaffna PHONE-2227635

யாழ்நகரில் தனித்துவமான ஒரு கணனி நிறுவனம்
புதிய பிரிவுகள் 26-07-2004 இல் ஆரம்பம்

- Certificate in MS Office
- Certificate in Desktop Publishing
- Diploma in Computer Studies
- Certificate in Hardware Engineering
- Kiddies Computing
- Visual Basic

➡ Type Setting, Scanning & CD Writing

CIS
SPEED & INTELLIGENT IT- SOLUTION

தொழில் புரிவோர், பாடசாலை மாணவர்களின் நலன்கருதி மாலை 7 மணிவரை வகுப்புக்கள் நடாத்தப்படும்.
➡ INDIVIDUAL & GROUP CLASSES
➡ UNLIMITED PRACTICAL HOURS

## —உடன் விற்பனைக்கு—




**Hitachi Mini Excavator EX 35
1996 Model**

மேலதிக விபரங்களுக்கு:- கு. தவேந்திரன்
இல : 09 அருளம்பலம் வீதி, அரியாலை.
T.P : 021 4590527, 0777 291636

# மனவளர்ச்சி குன்றுதல் மரபணு வியாதியா?

சில சிறுவர்கள் ... ர் மனவளர்ச்சி குன்றிக் காணப்படுகிறார்கள். 'ஓடிஸம்' (Autism) என்கின்ற சிக்கலான இந்த வியாதிக்கு மூலகாரணம் என்ன என்பது இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது. இது பரம்பரையாக வருகிற ஒருவித குறைபாடா என்கின்ற சந்தேகமும் இருந்தே வருகிறது. அல்லது எந்த மரபணு குறைவால் இப்படி குழந்தைகளுக்கு மனவளர்ச்சி குன்றி



வருகின்றது என்பதும் இதுவரை தெரியவில்லை. இப்போது இது குறித்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

'ஓடிஸம்' நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து பெறப்பட்ட 6 ஆயிரம் டி.என்.ஏ. மாதிரிகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நோய்க்கான மரபணுவைக் கண்டறிந்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் ஆராய்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக அமெரிக்க தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்துள்ள ஆராய்ச்சித் திட்டத்தில் அமெரிக்கா, கனடா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் சிலவற்றைச் சேர்ந்த 170 நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சியாளர்கள், குறிப்பிட்ட மரபணுவைக் கண்டறிவதற்காக 'DNA Microarray' என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார்கள்.


இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் "ஆராய்ச்சிகள் நிறைந்த நம்பிக்கையைக் கொடுத்துள்ளன. ஆனால், சூழலியல் காரணிகளும் இந்த வியாதியில் சிறிதேனும் தொடர்புபடுவதாகவே தெரிகிறது" என்கிறார்.

இந்த வியாதியில் எந்த மரபணு சம்பந்தப்படுகிறது என்பதனை அறிவதற்கு விஞ்ஞானிகள் தொடர்ந்தும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த விஞ்ஞானிகள் குழுவில் உள்ள கலாநிதி லோனா விங் (Lorna wing) கூறுகையில் "இரண்டு பிள்ளைகள் 'ஓடிஸம்' வியாதியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களில் இருந்து பெறப்பட்ட 6 ஆயிரம் டி.என்.ஏ களில் அடுத்த ஆறு மாத காலத்துக்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வோம். குழந்தைகளுடைய பெற்றோரும் இப்பரிசோதனையில் சேர்க்கப்படுவார்கள்" - என்றார்.

இந்த ஆராய்ச்சிக்காக குறிப்பிட்ட குடும்பத்தவர்களின் மரபணுக்களை 'ஸ்கான்' செய்ய வேண்டும். அதற்கு சிறிய நாணய அளவிலான ஒரு மின்னணு ஆளி இவர்களுடைய உடலில் பொருத்தப்படும். இதை வைத்து இந்த குடும்பத்தாரின் மரபணுக்கள் அடையாளமிடப்பட்டு அவை ஆராயப்படவுள்ளன.

குறிப்பிட்ட மரபணுவை கண்டறிவதற்காக விஞ்ஞானிகள் பயன்படுத்தும் மரபணுப் பட்டியானது (gene chip) ஆயிரக்கணக்கான டி.என்.ஏ. தொகுப்பு இழைகளை கொண்டிருக்கின்றது. இது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களின் மரபுத் தன்மையை வெளிப்படுத்துவதாய்



இருக்கும்.

'ஓடிஸம்' வியாதிக்கான மரபணு தொடர்பிலான இந்த ஆராய்ச்சிகள் 2005 ஆம் ஆண்டின் முற்பகுதியில் முடிவடையலாம். 'ஓடிஸம்' ஜீன் தொடர்பில் இந்த ஆய்வுகளே மிக நீண்டதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'ஓடிஸம்' என்ற இந்த வியாதிக்கு பொருத்தமான மருத்துவ சிகிச்சை முறைகள் இதுவரை கண்டறியப்படவில்லை. ஐரோப்பிய நாடுகளில் மட்டும் இந்த வியாதியால் 535 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'ஓடிஸம்' ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த பிரிஸ்கா சென்மேர்வின் (Prisca ChenMarvin) கூறுகையில், "ஓடிஸம் நோய்க்குக் காரணமான மரபணுக்களைக் கண்டுபிடிப்பதற்காக மிகவும் நிபுணத்துவம் மிக்க தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டியிருப்பதை இட்டு நாங்கள் ஆச்சரியமடைகிறோம். இந்த வியாதிக்குச் சிகிச்சையளிப்பதற்காக அதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டியது அதி முக்கியமானதாகும்" - என்றார்.

முதற்கட்ட ஆராய்ச்சிகள் முடிவடைந்ததும் இந்த விஞ்ஞானிகள் குழுவினர், குறிப்பிட்ட சில பிறப்புரிமை விகாரங்கள் தொடர்பில் ஆராய்ச்சிகளை நடத்தி அவை ஏதாவது இந்த வியாதியுடன் தொடர்புபடுகின்றனவா என்று ஆராய்ச்சி செய்வார்கள்.

இந்த விஞ்ஞானிகள் குழுவைச் சேர்ந்த லொனா விங் மேலும் கூறுகையில், 'ஓடிஸம்' வியாதிக்கு மிக முக்கிய காரணமாகப் பிறப்புரிமைக் காரணிகள் உள்ளன என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் தென்படுகின்றன. குறிப்பிட்ட மரபணு எது என்பதைக் கண்டறிவதற்கு விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். இதற்கு ஒரு ஜீன் பொறுப்பாக உள்ளது என்பதை விட பல ஜீன்கள் பொறுப்பாக உள்ளன என்பதற்கே சாத்தியக் கூறுகள் உண்டு. 'ஜீன்'களுக்கிடையிலான இடைத்தாக்கமும் 'ஜீன்'களுக்கும் சூழலியல் காரணிகளுக்கும் இடையிலான இடைத்தாக்கமும் ஆராய்ச்சிகளைச் சிக்கலுக்குள்ளாகின்றன. இது தொடர்பில் விரிவான ஆராய்ச்சிகள் தேவை" - என்றார்.

இந்த ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பமானது இருதய நோய் மற்றும் புற்றுநோய் போன்றவற்றுக்கு மரபணுக்கள் சம்பந்தப்படுகின்றனவா என்பதனைக் கண்டறிவதற்கும் பயன்படுத்தப்படலாம்.

இந்த விஞ்ஞானிகள் குழுவைச் சேர்ந்த கிரேக யப் (Greg yapp) கூறுகையில், "அநேக சிக்கலான வியாதிகளுக்குப் பிறப்புரிமை மூலங்களே காரணங்களாக உள்ளன. இதனால் இங்கு பயன்படுத்தப்பட்ட அதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றுக்கான சிகிச்சை முறைகளையும் கண்டறியலாம்" - என்றார். ✪

# புவியின் சுவாசப்பையில் தீ! அதிகரிக்கிறது அச்சுறுத்தல்!!

காட்டுத் தீயால் சேதமான செவ்விந்தியரின் பழங்குடிசை ஒன்று.



அமேஸன் காட்டின் பெரும் பகுதியில் ஏற்பட்டுள்ள அழிவு காரணமாக உலகம் மிகப்பெரிய காபனீரொட்சைட் மாசு அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

காட்டுத் தீயினாலும் மற்றும் மரங்களை வெட்டி அகற்றுவதாலும் உள்நாட்டுக்குரிய இனங்களும் அழிவடைவதாக அவர்கள் கூறுகின்றனர்.

வருடாவருடம் ஏற்பட்டு வருகின்ற காட்டுத்தீ காரணமாக அமேஸன் காட்டின் பல மில்லியன் ஹெக்ரெயர் பரப்பு அழிந்து வருகிறது.

இதனால், பிரேஸில் நாட்டிலிருந்தே அதீதமான அளவில் காபனீரொட்சைட் மாசு சூழலுக்கு விடப்படுகின்றது என்று பிரேஸிலிய பல்கலைக்கழகப் பேராசிரியர் கரோல்ஸ் கூறுகிறார்.


உலகின் மிகப்பெரிய அமேஸன் காடுகள் 'பூமியின் சுவாசப்பை' (Lungs of the Earth) என வர்ணிக்கப்படுகின்றன. அங்கு ஏற்பட்டுள்ள காட்டுத்தீயினால் ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பாகப் பிரேஸிலிய மற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். அவர்களின் கூற்றுப்படி, காடழிவதால் வருடந்தோறும் 200மில்லியன் தொன் காபனீரொட்சைட் வாயு சூழலுக்கு விடப்படுகிறது. இதுதவிர, சுவட்டு எரிபொருள்களின் விளைவால் ஆண்டுதோறும் 550 மில்லியன் தொன் பச்சைவீட்டு வாயுக்கள் (Green House Gas) பிரேஸிலில் இருந்து சூழலுக்கு விடப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்மூலம், உலகை அச்சுறுத்தலுக்கு உளளாக்கும் முதல் நாடாக பிரேஸில் மாறியுள்ளது. இதுதவிர, அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளும் முன்னிலையில் உள்ளன. எனினும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சுவட்டு எரிபொருள் மாசாக்கிகளை பிரேஸில் மிகக்குறைந்த அளவிலேயே வெளியேற்றுகின்றது.

கடந்த வருடம் மாத்திரம் அமேஸன் காட்டின் 14ஆயிரத்து 754 சதுர கிலோமீற்றர் பரப்பளவு இழக்கப்பட்டுள்ளது என்று பிரேஸிலிய அரசு தெரிவிக்கிறது.

உலகின் 5ஆவது பெரிய நாடான பிரேஸில், உலகிலேயே உயர்ந்த உயிர்ப்பல்வகைமையை (Bioiversity) கொண்டுள்ள நாடாகும்.

அங்குள்ள 1.6 மில்லியன் சதுரகிலோமீற்றர் பரப்பளவு மழைக்காட்டில் 20 வீதமானவை ஏற்கனவே அபிவிருத்தி, விவசாயம் மற்றும் விறகுத் தேவைக்காக அழிக்கப்பட்டுவிட்டதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.



பிரிட்டனில் இடம்பெற்ற வானூர்திகள் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஆளின்றி இயங்கும் புதிய ரகப் போர் விமானம்.

## கண்ணாலே....!



கண் அசைவுகளின் மூலம் கணனியை இயக்கும் தொழில்நுட்பத்தை Irscom என்னும் ஸ்பெய்ன் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இத்தொழில் நுட்பமூலம் கண் அசைவுகளுக்கு ஏற்ப கணனி Mouse குறியீடுகளும் நகரும். கண் இமைப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கோப்பினை 'கிளிக்' பண்ணலாம். இது கை இயக்கத்தை முற்றாக இழந்தோருக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

தற்போது ஸ்பெய்ன் மொழி வழக்கத்தில் உள்ள நாடுகளில் அறிமுகம் கண்டுள்ள இத்தொழில்நுட்பம் விரைவில் உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# எலுமிச்சை ரசமா? பெண்களே கவனம்!

எலுமிச்சம் பழரசம் அதிகமாக அருந்தும் பெண்களுக்கு கருத்தரிப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் குறைவடைவதாக நைஜீரிய மருத்துவர்கள் கூறுகின்றனர்.

நைஜீரியாவில் கருத்தரிப்பைத் தவிர்க்கப் பெண்கள் எலுமிச்சப் பழரசம் அருந்துவது ஒரு மரபு. இதனை இப்போது விஞ்ஞான ரீதியாகப் பரிசோதித்த மருத்துவர்கள் இது பயனளிக்கலாம் என்கிறார்கள்.

நைஜீரிய மருத்துவர் சொலமன் செச் இது பற்றிக் கூறுகையில்:-

"கருத்தரிப்பைத் தவிர்க்க எலுமிச்சப் பழரசம் அருந்தலாம் என்பது நைஜீரிய பெண்கள் கடைப்பிடித்து வருகின்ற ஒரு மரபு இது பயனளிக்கின்றது என்றும் அவர்கள் எங்களிடம் தெரிவிக்கிறார்கள். இந்தப்பரிசோதனைகளை இப்போது நடத்தி வருகின்றோம். என்ன ஆகிறது பார்க்கலாம்" - என்றார்.

பெண்ணின் யோனி உறுப்பானது சற்றே அமிலத்தன்மை கொண்டது. பாலுறவின்போது அது தன்னுடைய அமிலத்தன்மையை இழக்கிறது. அதன் மூலமாக ஆண் விந்தானது வீரியம் இழக்காமல் கலந்து கருத்தரிப்பு நடக்கும் சாத்தியம் உருவாகின்றது. பெண்கள் எலுமிச்சம் பழரசம் அருந்துவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தால் இந்த அமிலத்தன்மையானது குறையாமல் இருக்கும். இதனால் கருத்தரிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

ஆனால், இத்தகைய பெண்களுக்கு எயிட்ஸ் நோய் ஏற்படும் சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன என்று நைஜீரிய மருத்துவர்கள் கூறுகின்றார்கள். அதாவது, பெண் யோனியின் குறைவடையாத அமிலத்தன்மை காரணமாக ஆண்விந்து மூலமாக வருகின்ற கிருமிகள் கொல்லப்படலாம் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த எலுமிச்சம்பழ பரிசோதனை என்ன சொல்லப்போகிறது? பொறுத்திருந்து பார்ப்போம்.

**சுடரும் விஞ்ஞானம்**
ராஜபுத்திரன்

# மகளிருக்கு 'மச்சம்' ஆகாது

பெண்கள் மாமிசத்தைத் தவிர்த்து தினமும் காய்கறி உணவை உட்கொள்வதால் 35 சதவீதமான அளவுக்குப்புற்று நோயைத் தடுக்க முடியும். உலக புற்றுநோய் ஆய்வு மைய அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் உடற்பயிற்சி செய்வது, 18 வயதுக்குப்பின்னர் சுமார் 5 கிலோகிராமுக்கு மேல் உடல் எடையை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது, தினமும் 5 வகைக் காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ளுவது, பழங்கள் சாப்பிடுவது, உப்பு, இறைச்சி ஆகியவற்றை உணவில் குறைத்துக்கொள்வது போன்றவற்றால் மார்பகப்புற்று உட்பட அனைத்துப் புற்று நோய்களும் ஏற்பட வாய்ப்பில்லையாம். 30 ஆயிரம் அமெரிக்க பெண்களிடம் புற்று நோய் ஆய்வு மையம் இந்த ஆய்வை மேற்கொண்டது. குறிப்பாக, 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்தப் பழக்கவழக்கத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என ஆலோசனை தெரிவித்துள்ளது இந்த மையம்.

# ஒலிம்பிக் ஹொக்கி அணியில் தன்ராஜ்பிள்ளையும் இடம்பெற்றார்

மும்பை,ஜூலை22

எதென்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் ஹொக்கிப் போட்டிக்கான இந்திய ஹொக்கி அணியில் தன்ராஜ்பிள்ளை இடம்பிடித்துள்ளார்.

ஒலிம்பிக் ஹொக்கி அணிக் பயிற்சி முகாமுக்கு வீரர்கள் அறிவிக்கப்பட்டபோது தன்ராஜ் பிள்ளை, பல்ஜீத் சிங் தில்லான் ஆகியோர் இடம்பெறவில்லை. விளையாட்டுத்துறையினர், பள்ளிக் கல்லூரிகளின் மாணவ, மாணவிகள் மற்றும் பலதுறையைச் சேர்ந்தவர்கள் தன்ராஜ் பிள்ளை அணியில் இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்திய பின்னர் இருவரும் பயிற்சிமுகாமுக்கு அழைக்கப்பட்டு தற்போது ஜேர்மனியில் அறிவிக்கப்பட்டுள்ள இந்திய அணியிலும் இடம் பிடித்துவிட்டனர்.

(10)

# மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் அணிகளுக்குப் பிரமாண்டமான பரிசுகள்

மும்பை,ஜூலை22

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு அடுத்து மிகமுக்கியமானது மினி உலகக் கிண்ணப் போட்டியாகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இந்தப் போட்டி செப்ரெம்பர் 10 முதல் 25 வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. 12 நாடுகள் இம்முறை களமிறங்குகின்றன.

கிரிக்கெட் வரலாற்றில், உலகக் கிண்ணத் தொடருக்கு அடுத்தபடியாக மிகப்பிரமாண்டமான பரிசுகள் இதில் பங்கேற்கும் அணிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வெற்றிக்கும் பல லட்சம் பெறுமதியான பரிசுகள் கிடைக்கும். ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணி அரையிறுதியில் வெற்றி பெறும் அணி என்றுபரிசு மழைதான். கிண்ணம் வெல்லும் அணிக்கு பம்பர் பரிசாக ஐந்து கோடி ரூபா பரிசு வழங்கப்படும்.

பங்கேற்கும் 12 அணிகள் மொத்தம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணி அரையிறுதிக்குத் தகுதிபெறும். ஒவ்வொரு பிரிவிலும் பலமான இரு அணிகள் இடம்பெற்றிருப்பதால் போட்டிகள் மிகக்கடுமையாக இருக்கும். இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றிருப்பது இத்தொடர் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

பிரிவு - ஏ :ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா.

## விளையாட்டு

பிரிவு - பி : தென்ஆபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பங்காளதேஷ்.

பிரிவு சி : இந்தியா, பாகிஸ்தான், கென்யா.

பிரிவு டி : இங்கிலாந்து, இலங்கை, சிம்பாப்வே.

(10)

# ட்ராவிட்டின் விக்கெட்டை எடுத்ததே எமது வெற்றிக்குக் காரணம் - முரளி

கொழும்பு,ஜூலை22

இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சர்வதேசக் கிரிக்கெட்டுக்குத் திரும்பியிருக்கிறேன். ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் முதல் சுற்றில் எனது பந்து வீச்சுத் திருப்தியாக இருக்கிறது என்று இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் எங்கள் வீரர்கள் 282 ஓட்டங்களைக் குவித்தபோதிலும் ஒருநாள் போட்டியில் கடைசிப் பந்து வரை எதையும் கணிக்கமுடியாது என்ற டென்ஷன் இருக்கத்தான் செய்தது.

சொய்சா பிரமாதமாகப் பந்து வீசி, ஆட்டத்தை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். ஆனால், ராகுல் ட்ராவிட், யுவராஜ் சிங் ஜோடி வெற்றியை இந்தியாவின் திசைக்கு இழுத்துச் சென்றது. அப்போதுதான், ராகுல் ட்ராவிட் என்ற அற்புதமான விக்கெட் எனக்குக் கிடைத்தது. அந்தப் போட்டியின் மதிப்பிற்குரிய விக்கெட் அதுதான் நேற்று இரண்டாவது சுற்று ஆரம்பமாகியுள்ளது. சொந்த மண்ணில் நாங்கள் வீழ்த்த முடியாத அணி என்பதை இந்தத் தொடர் மூலம் மீண்டும் ஒருமுறை நிரூபிப்போம் என்று முரளிதரன் தெரிவித்துள்ளார்.(-10)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்றுவரும் மின்னொளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்கள் வருமாறு:-

இரவு 7.30 மணி ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

இரவு 8 மணி அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.

(10)

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை22

அச்செழு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

செ.சுரேஸ்கரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை கலந்துகொள்வார். (10-204)

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை22

உள்ளூராட்சி வாரத்தையொட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் மானிப்பாய் பிரதேச சபை அலுவலர்கள் அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் பிரதேச சபை அணி 93 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பிரதேசசபை அணி 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 94 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

சிறந்த பந்து வீச்சாளராக சுன்னாகம் பிரதேச சபை அணியைச் சேர்ந்த எஸ்.டலிகனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மானிப்பாய்ப் பிரதேச சபை அணி வீரர் பா.அகிலனும்,

சகலதுறை வீரராக மானிப்பாய் பிரதேச சபை அணி வீரா ஆ.நித்தியவர்ணனும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆட்டத்தின் நடுவர்களாக வலி. தெற்குப் பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி எஸ். பாஸ்கரன், சமுர்த்தி அதிகாரி எஸ்.நதீஸ் ஆகியோர் கடமையாற்றினர். (10-185-190)

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை22

பாஷையூர் புனித அந்தோனியார் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அருட்சகோதரி டினா தலைமையில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ௭.ஸ்ரெலின் அடிகளார் கலந்துகொள்ளவுள்ளார். (10-190)

யாழ்ப்பாணம்,ஜூலை.22

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய 19 வயதிற்குட்பட்டோருக்கு இடையிலான பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று இவ்வருட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி அணியை எதிர்த்து விளையாடிய திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது.

17 வயதிற்குட்டோருக்கு இடையிலான உதைபந்தாட்டப்போட்டி திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் கடந்த சனி, ஞாயிறு இருதினங்கள் நடைபெற்றது. இதில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் மன்னார் வங்காலை சென். ஆன்ஸ் வித்தியாலய அணியை வெற்றிகொண்டு இவ்வருடச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.(10-190)

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை22

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த இறுதிப் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய பெண்கள் அணியை எதிர்த்து விளையாடிய வவுனியா கணேஸ்வரா வித்தியாலய பெண்கள் அணி வெற்றியீட்டி இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

(10-190)

★ ★ ★ ★ ★

குடத்தனை,ஜூலை22

வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 41 ஆவது விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை காலை 6 மணி 31 நிமிடத்திற்கு ஆரம்பமாகும் விளையாட்டு நிகழ்வுகளில் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், விநோத உடைப் போட்டி ஆகியவை நடைபெறவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் விளையாட்டு நிகழ்வுகளில் ஆண்களுக்கான அஞ்சலோட்டம், பெண்களுக்கான அஞ்சலோட்டம், பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம், ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டம் மற்றும் கயிறிழுத்தல், கிறீஸ் கம்பம் ஏறுதல் ஆகியன நடைபெறவுள்ளன.

இறுதியாக வெற்றிபெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு வைபவம் நடைபெறும். (10-78-15)

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ் பல்கலைக்கழக விளையாட்டுக் அவையினால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படவுள்ள பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஒழுங்கமைப்புக் குழுவினர் கேட்டுள்ளனர்.

(10-5-190)


சுவிற்ஸர்லாந்து
கலாநிகேதன் நடனாலயம்
அளிக்கும்
நாட்டியாஞ்சலி

யாழ். உரும்பிராய் "கலைக்கோவில்" நாட்டிய நிலைய அதிபரும், முன்னாள் ஆற்றுகைக் கலைஞரும், யாழ். கல்வி வலய ஆடற்கல்வி ஆலோசகருமான
திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் அவர்களின்
முதல்நிலை மாணவிகளுள் ஒருவரான "நாட்டியக் கலைமணி",
"கலாவித்தகர்" திருமதி கிருஷ்ணபவானி ஸ்ரீதரன்
அவர்களின் சுவிற்ஸர்லாந்து மாணவிகள் அளிக்கும்

நாட்டியாஞ்சலி
(சிறப்பு ஆடல் நுணுக்குகள்)

காலம்: நாளை (23.07.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி
இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்

சிறப்பு வருகையாளர்கள்:
"நாட்டியவேள்", கலைஞர்" வேல் ஆனந்தன்
இந்தியக் கலைஞர் சாகீர் உசைன்
திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்
திருமதி கிருஷாந்தி இரவீந்திரா
திருமதி சாந்தினி சிவநேசன்
கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு: நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்படும்

இயக்குநர்,
சுவிற்சர்லாந்து
கலாநிகேதன் நடனாலயம்.



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
செல்வி ந.கேதீஸ்வரி
அவர்களின் அன்புத் தந்தையார்
கணபதிப்பிள்ளை நமசிவாயம்

அவர்கள் 20.07.2004ஆம் திகதி இயற்கையெய்திய செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

யா/அத்தியார் இந்துக்கல்லூரி.
நீர்வேலி. (34365) (26-19-17-24) - ஆசிரியர் கழகம்.



PILLAIYAR INN GARDEN RESTAURANT
பிள்ளையார் காடின் ரெஸ்ரோறன்ஸ் உங்களை வரவேற்கிறது

காலை உணவு : பால் அப்பம்/வெள்ளை அப்பம்
மதிய உணவு : தண்டூரி சிக்கின்
இரவு உணவு : ஆட்டா/குரக்கன் பிட்டு
சிக்கின் புரியாணி, கடல் உணவு வகைகள், நாவுக்கினிய இனிப்புப் பண்டங்கள்

மேற்கூறிய உணவுவகைகள் ஆகக் குறைந்தது 3 அல்லது 4 மணித்தியாலயங்களுக்கு முன் ஓடர் செய்ய வேண்டும். முன்கூட்டியே [illegible]களைப் பதிவு செய்தால் தாமதமில்லாமல் உணவுகளை வழங்கமுடியும்.
உங்கள் விசேட வைபவங்களான திருமணம், பிறந்தநாள் விழா, வியாபாரக் கூட்டங்கள் மற்றும் வைபவங்களைக் கொண்டாட குளிரூட்டப்பட்ட மண்டபங்களுண்டு.
உணவுகள் பார்சலாகத் தரப்படும்.
குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள்.
உங்கள் பயண நலன்கருதிக் குளிரூட்டப்பட்ட வாகனங்கள்.
இருந்த இடத்திலிருந்தே லயன் ஏயர் (Lion Air) Expo Aviation (எக்ஸ்போ) விமானப் பயணச்சீட்டுக்கள், Expo Gas இவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளத் தொடர்பு கொள்ளவேண்டிய இடம்

பிள்ளையார் இன் (Stores),
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(34362)(42-19-17-24)

Tel: 021 222-5595
Tel: 021-222-2829
Fax: 021-222-5595
Email : Piyarinn @ sltnet.lk
WEB: WWW/Pillaiyar inn.Com

# ஐ.நா.தீர்மானத்தை மீறி இஸ்ரேல் தடுப்புச் சுவரைக் கட்டுகிறது

டெல்அவிவ்,ஜூலை22

ஐ.நா. தீர்மானத்தையும் மீறி மேற்குக்கரையில் தடுப்புச்சுவர் அமைக்கும பணி தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

மேற்குக்கரையில் பலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேல் தடுப்புச் சுவர் அமைப்பது சட்ட விரோதமானது என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் அடிப்படையிலான பிரேரணைகள் நேற்றுமுன்தினம் ஐ.நா.பொதுச்சபையில் கொண்டுவரப்பட்டது. சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தடுப்புச் சுவரை இஸ்ரேல் அகற்ற வேண்டும் என்று பிரேரணையில் வலிறுத்தப்பட்டிருந்தது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 150 நாடுகள் வாக்களித்தன. 6 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்தன. 10 நாடுகள் நடுநிலை வகித்தன. இதனால் இப்பிரேரணை 150-6 என்ற அடிப்படையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இஸ்ரேலை அதிகார பூர்வமாகக் கட்டுப்படுத்தும் வலு இத்தீர்மானத்துக்கு இல்லை. ஆனாலும் இஸ்ரேலுக்கு தார்மீக அழுத்தம் கொடுக்கும் இந்த நிலையில் ஐநா.பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்க முடியாதென்றும் -

தடுப்புச் சுவர் அமைக்கும்பணி தொடரும் என்றும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் சிரேஷ்ட ஆலோசகர் டோர் கோல்ட் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை பலஸ்தீனர்களுக்கு கிடைத்த பாரிய இராஜதந்திர வெற்றி என்று பலஸ்தீன நிர்வாகத்தின் தலைமை பேச்சாளர் சயீப்எரகட் தெரிவித்தார்.

191 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. பொதுச்சபைக்கு அதன் தீர்மானங்களை ஏற்கச் செய்யும் அதிகாரம் கிடையாது. 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளும் 15 தற்காலிக உறுப்பு நாடுகளும் அங்கம் வகிக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கே அதற்கான அதிகாரம் உண்டு. ஆயினும் இஸ்ரேலுக்கு எதிரான இந்தத் தீர்மானம் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படுவதை அமெரிக்கா தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்து விடும் என்று கூறப்படுகிறது. (ஒ)

## தீவிரவாதிகள் தாக்கியதில் காஷ்மீரில் 4பொலீஸார் பலி!

ஜம்மு,ஜூலை22

இந்தியாவின் ஜம்முகாஷ்மீரின் தோடா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 4 பொலீஸார் இறந்தனர். மற்றொரு பொலீஸ்காரர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வழக்கு ஒன்று தொடர்பாக விசாரணை நடத்தி பேவ்லி கோட்டி பகுதிக்குச் சென்றுவிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8மணி அளவில் வாகனத்தில் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கே மறைந்திருந்த தீவிரவாதிகள் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதில் 4 பொலீஸார் அங்கேயே இறந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)



ஏதென்ஸ் நகரில் அடுத்த மாதம் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டியையொட்டி சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக பழம் பெரும் பார்த்தினன் ஆலயம் மின் விளக்குகளால் ஒளியூட்டப்பட்டு ஜொலிக்கிறது.

# நிலக்கரிச் சுரங்க வெடிவிபத்து; உக்ரைனில் 25 பேர் உயிரிழப்பு!

மொஸ்கோ,ஜூலை22

கிழக்கு உக்ரைன் பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட மீதேன் வாயு வெடிவிபத்தில் 25 சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகிவிட்டனர். மேலும் 11 பேர் காணாமற் போயுள்ளனர்.

உக்ரைனின் டஜட்ஸ்க் உள்ள கிராஸ்நலிமன்ஸ்கயா என்ற நிலக்கரி சுரங்கத்தில் கடந்த திங்கட்கிழமை பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதனால் சுரங்கம் முழுவதும் மிகப்பெரிய அளவில் தீப்பிடித்தது. சுரங்கத்தின் அடிப்பகுதியில் இருந்த தொழிலாளர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர். ஆறு மணி நேர மீட்புப் போராட்டத்துக்குப் பின் சுரங்கத்திற்குள் பலியாகிக் கிடந்த 25 பேரது உடல்கள் வெளியில் கொண்டு வரப்பட்டன. இருந்தபோதிலும் மேலும் 11 பேரைக் காணவில்லை. அவர்களின் நிலைமை என்ன ஆனதென்று தெரியவில்லை.

இந்தத் தகவல்களை உக்ரைன் அரசு அறிவித்துள்ளது.

வெடிவிபத்து நிகழ்ந்த போது சுரங்கத்துக்குள் மொத்தம் 46 பேர் இருந்தனர் என்றும் தொழிலாளர்கள் தங்களது பணிநேரத்தை மாற்றிக்கொள்ளும் நேரத்தில் இவ்வாறு நிகழ்ந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இந்த விபத்திலிருந்து பத்து சுரங்கத் தொழிலாளர்கள் உயிர் தப்பியுள்ளனர்.

விபத்து நடந்தவுடன் அந்தச் சுரங்க வெப்பம் கடுமையாக இருந்தது. அடர்த்தியான கரியமில வாயு நிறைந்த் புகை மண்டலமாகவும் இருந்தது. இதனால் மீட்பு நடவடிக்கைகளில் இடையூறு ஏற்பட்டது. விபத்து பற்றி கேள்விப்பட்டவுடன் உக்ரைன் பிரதமர் விக்டர் யனுகேவிச் சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்தார். தீப்பிடித்து எரிந்த சுரங்கத்தை பார்வையிட்ட அவர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த உத்தரவிட்டார். (ஒ)

### சந்திரனில் கால் வைத்து 35 ஆண்டுகள் நிறைவு

சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்து 35 ஆண்டுகள் ஆகியுள்ளன. 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி விண்வெளி நிபுணர் நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் இறங்கி நடந்தார். இதை 'நாசா' விண்வெளி ஆராய்ச்சி நிலையம் கோலாகலமாகக் கொண்டாடியது.

1969 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி 'அப்பலோ' விண்கலத்தில் புறப்பட்ட ஆம்ஸ்ட்ரோங் உட்பட 3 நிபுணர்கள் 4 நாள்கள் பயணத்துக்கு பிறகு நிலவை அடைந்தனர்.

### ஈராக்கில் ஆளுநர் சுட்டுக்கொலை!

ஈராக்கில் பாஸ்ரா நகர் அருகே மாநில ஆளுநர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்ததும் அமெரிக்க நிர்வாகம் ஆட்சிப் பொறுப்பை வைத்திருந்தது. கடந்த மாதம் உள்ளூர் தலைவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தது. இருப்பினும், அமெரிக்கக் கூட்டணிப் படைகள் ஈராக்கில் நிலைகொண்டுள்ளன. இந்நிலையில், புதிதாக பொறுப்பேற்றுள்ள உள்ளூர் தலைவர்களை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திவருகின்றனர். கடந்த வாரம் மேரில் நகர ஆளுநர் உசாமா என்பவரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். கடந்த திங்கட்கிழமை பக்தாத்தில், பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் அதிகாரியைக் கொன்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பாஸ்ரா நகர ஆளுநர் ஹசன் அல் - அய்னாச்சியை (வயது 59) அடையாளம் தெரியாதோர் சுட்டுக் கொன்றனர். தெற்கு பாஸ்ராவில் உள்ள ஜுபைலா பகுதியில் இந்தப் படுகொலை சம்பவம் நடந்தது. ஆளுநரின் பாதுகாவலர் இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தார். தனது தந்தை அலுவலகம செல்லும் வழியில் இப்படுகொலை நடந்துள்ளதாக ஆளுநரின் மகன் இசம் அல் - அய்னாச்சி தெரிவித்துள்ளார். (ஒ)

# அணுகுண்டு வீசியவர் 82வயதில் காலமானார்

வாஷிங்ரன்,ஜூலை22

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானிய நாகசாகி நகரின் மீது அணுகுண்டை வீசியவரான ஓய்வுபெற்ற அமெரிக்க ராணுவ ஜெனரல் சார்ள்ஸ் ஸ்வீனி என்பவர் தமது 82 வயதில் கடந்த 15ஆம் திகதி காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூஸ்டனிலுள்ள மாசூசெட்ஸ் பொது வைத்தியசாலையில் அவர் காலமானார். மரணத்துக்கான காரணத்தை வைத்தியசாலை வட்டாரங்கள் வெளியிட மறுத்துவிட்டன.

1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9ஆம்திகதி நாகசாகி மீது புருட்டோனியம் - 239 குண்டை வீசிய விமானத்தை ஓட்டிச்சென்றபோது அவருக்கு 25 வயது. நாகசாகி நகரை அக்குண்டு தரைமட்டமாக்கியதுடன் 74,000 பேரின் உயிரையும் குடித்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இறுதி நாள்களில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து ஜப்பானிய அரசு அடுத்த நாளே சரணடைந்தது. இறந்தவர்களின் எண்ணிக்கை பின்னர் 130,000 ஆக அதிகரித்தது. கதிரியக்கத்திற்கு நேரடியாக உள்ளானவர்கள் நோய்களினால் பின்னர் மரணமானார்கள்.

இக்குண்டுத் தாக்குதலுக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக எனோலா குடாவின் கரையோரப்பகுதியில் B-29 ரக விமானத்தில் பறந்து வேவுபார்ப்பதிலும் புகைப்படங்கள் எடுப்பதிலும் இவர் ஈடுபட்டார். இவரின் இந்த செயற்பாடு ஹிரோஷிமா மீது உலகின் முதலாவது குண்டை அமெரிக்கா வீசுவதற்கு வழிகோலியது. இதில் 2 லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள்.

அணு குண்டுத்தாக்குதலை ஸ்வினி வெகுவாக ஆதரித்து பேசிவந்துள்ளார். உலக யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர உதவியாக இருந்தது என அவர் நியாயம் கற்பித்து வாதாடி வந்துள்ளார். (ப)

# ஆப்கானியரை சித்திரவதை செய்ய ரம்ஸ்பீல்ட் முழு ஆதரவளித்தார்!

## தனிச்சிறை நடத்திய அமெரிக்கர் வாக்குமூலம்

காபூல்,ஜூலை22

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சுயாதீனமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த அமெரிக்கர், அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் டொனால் ரம்ஸ்பீல்டின் அறிவுறுத்தலுடனேயே தான் செயற்பட்டதாகக் கூறியுள்ளார்.

தலைநகர் காபூலில் வீடொன்றில் பிரத்தியேகச் சிறைச்சாலை ஒன்றை நடத்தி வந்தார் என்றும் -

அந்தச் சிறையில் ஆப்கானியர்களை அடைத்து வைத்து சித்திரவதை செய்தார் என்றும் - ஜோனாதன் கேடிமா என்ற அந்த அமெரிக்கர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் இவருக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு அமெரிக்கர்களும், 4 ஆப்கானியர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர் மீதான விசாரணை நேற்று காபூல் நகரில் இடம்பெற்றது.

ஆப்கானில் பயங்கரவாதத்துக்கு எதிராக சுயாதீன நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தனக்கு அமெரிக்கப்பாதுகாப்புத்துறைச் செயலர் ரம்ஸ்பீல்ட் ஆதரவளித்தார் என்றும் -

அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் ரம்ஸ்பீல்ட்டுடன் தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல் ஆகியவற்றினூடாக தினமும் தொடர்புகொண்டிருந்ததாகவும் - ஜோனாதன் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஆனாலும் இவரது கூற்றை அமெரிக்க பாதுகாப்புத்துறை மறுத்துள்ளது. (ஒ)

உலக அரங்கில்

# கிரேக்க மாவீரர் அலெக்சாண்டர் பறவைக் காய்ச்சலால் இறந்தாரா?

வாஷிங்ரன்,ஜூலை22

உலகின் மூன்று கண்டங்களில் மாபெரும் பேரரசை நிறுவிய கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர் பறவைக் காய்ச்சல் நோயால் உயிரிழந்திருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அலெக்சாண்டர் விஷம் கொடுத்துக் கொலப்பட்டார் என்று இதுவரை ஆராய்ச்சியாளர்கள் கருதிவந்தனர். ஆனால், அண்மையில் வேர்ஜினியாவைச் சேர்ந்த வரலாற்று அறிஞர்கள்செய்த ஆய்வின் முடிவுகள் வேறுவிதமாக அமைந்துள்ளன.

குறிப்பிட்ட பறவை இனத்தால் பரப்பப்படும் மேற்கு நைல் வைரஸ் கிருமித் தொற்றால் அலெக்சாண்டருக்குக் காய்ச்சல் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

அலெக்சாண்டரின் வாழ்க்கை பற்றி குறும்படம் தயாரிக்கும் நிறுவனம் 2 ஆயிரத்து 327 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அவரது மரணம் குறித்து ஆய்வு செய்யும்படி வேர்ஜினியாவைச் சேர்ந்த ஆய்வாளர் ஜோன் மேரைக் கேட்டுக் கொண்டது.

அவர் நடத்திய ஆய்வில் அலெக்சாண்டருக்கு மேற்கு 'நைல் என்செபாலிடிஸ்' என்று அழைக்கப்படும் ஒரு வித பறவைக்காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

கிரேக்க வரலாற்று ஆசிரியர் புளூட்டார்ச் எழுதிய குறிப்பில் பாபிலோனின் (இன்றைய ஈராக்) மேற்கு எல்லையை அலெக்சாண்டர் கடந்த போது அவரது தலைக்கு மேல் பறவைக் கூட்டம் ஒன்று வட்டமிட்டது.

அவற்றில் பல அவரது காலடியில் விழுந்து இறந்தன என்று கூறப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் ஒரு சேரப் பார்க்கும் போது அலெக்சாண்டர் ஒரு வித பறவைக் காய்ச்சலால்தான் இறந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. (ஒ)

# பெருவில் நிலவும் கடுங்குளிரில் 46 குழந்தைகள் பலியாகினர்!

## ஒரு லட்சம் பேர் நோய்களால் பாதிப்பு

லிமா,ஜூலை22

தென் அமெரிக்காவில் பசிபிக் கடல் பகுதியை அண்டிய நாடு பெரு. இந்த நாட்டில் கடந்த சில வாரங்களாகக் கடுங்குளிர் நிலவுகிறது.

அங்குள்ள ஆண்டஸ் மலை பிரதேசத்தைச சுற்றி உள்ள கிராமங்களில் வசிப்பவர்கள்தான் குளிரால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பகுதியில் உள்ளவர்கள் கடல் மட்டத்திலிருந்து சுமார் 4 ஆயிரம் மீற்றர்கள் உயரத்தில் வசிக்கின்றனர்.

அங்கு குளிர் 25 பாகை செல்ஷியசுக்கும் குறைவாக உள்ளது.

இந்தக் கடுங்குளிரைத் தாங்க முடியாமல் கடந்த 2 மாதங்களில் 46 குழந்தைகள் பலியாகி விட்டனர்.

இது தவிர, ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் நிமோனியா மற்றும் சளி, இருமல் உட்பட பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டனர்.

இது தவிர 3 லட்சம் ஹெக்டேயர் பயிர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பனி மூட்டம் காரணமாக இந்தப் பயிர்கள் நாசமாகிவிட்டன; ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளும் பலியாகி விட்டன.

கடுங்குளிர் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஐ.நா.சபை சார்பில் 7 லட்சம் டொலர் நிதி உதவி அளிக்கப்பட இருக்கிறது. இந்தத் தகவலை பெரு நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் மானுவல் ரோட் ரிகஸ் தெரிவித்துள்ளார்.

உலக உணவு அமைப்பும் 2 லட்சம் தொன் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக பெரு நாடு கடும் வரட்சியில் சிக்கி தவித்தது. இப்போது குளிரின் பிடியில் சிக்கியுள்ளது.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை22

கிளிநொச்சி வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தொகுதி நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் அவசர தாய், சேய் மருத்துவ மேம்பாட்டுக்கான ஜப்பானிய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜப்பானிய தூதரகத்தின் பொருளாதாரப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் யுகி மியாகார திறந்துவைத்தார். ஜப்பானிய அரசு, யுனிசெவ் ஊடாக வழங்கிய நிதியிலிருந்து ஒரு கோடியே 20லட்சம் ரூபா செலவில் அந்தக் கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யுகி மியாகார கூறுகையில்:-

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு மேலும் உதவிகள் வழங்கப்படவுள்ளன. சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தை அடுத்து அவை இங்கு நடைமுறைப்படுத்தப்படும் - என்றார்.

(ஒ-10-9)



கிளிநொச்சி வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவை ஜப்பானிய தூதரகத்தின் பொருளாதாரப் பிரிவைச் சேர்ந்த கலாநிதி யுகி மியாகார நாடா வெட்டித் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

# 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் 117ஆவது இதழ் வெளிவந்துள்ளது

"கேள்விக்குறியாக உள்ளது சமாதானத்தின் எதிர்காலம்" என்ற முகப்புச் செய்தியுடன் வெளிவந்துள்ள இந்த ஏடு "விடுதலைப் புலிகள பத்திரிகையின் 117ஆவது இதழாகும்".

'ஆபத்தான ஆலோசனை' என்ற ஆசிரியர் தலையங்கத்துடன் வெளிவந்துள்ள இந்த ஏட்டில் "அரசியல் வணிகத்தின் காட்சியறைக் கோலங்கள்" என்ற தலைப்பில் கா.வே.பாலகுமாரன், "காலம் அனைக்கக் காத்திருக்கும் கொங்கோ மக்கள்" என்ற தலைப்பில் அருளாளன "படித்த பாடத்தை மீண்டும் படிக்கும் முயற்சி" என்ற தலைப்பில் எல்லாளன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள் ளன. அவற்றோடு கரும்புலி மேஜர் தனுசனின் நினைவாக "தேசத்தின் புயல்", "பிளவுபட்ட இலங்கை ஓட்டவல்லவர் யார்?", "தற்கொடைத் தாகுதல்களும் கரும்புலிகளும், அன்புச்சோலை மூதாளர் பேணலகம் பற்றிய "எங்கள் பிள்ளைகள் தேசத்தை காத்தார்கள் தேசம் இப்ப எங்களைக் காக்கிறது, "கனவாகி வருகிறது யுத்தத்திற்கு திரும்பவியலாத கட்டம்", "பூக்களுள் எழுந்த புயல்", நிதியுதவிகள் ஏய்க்கும் ஸ்ரீலங்கா; ஏமாறும் சர்வதேச சமூகம்" ஆகிய கட்டுரைகளும் இந்த இதழில் அடங்கியுள்ளன. வியாசனின் "ஆடிக் காற்றுக்கு அணையாத விளக்கு", "சித்திரைக் காற்றுக்கோ ஜீவனிழக்கும்" என்ற தலைப்பிலான கவிதையையும் "மாமனதை யாரறிவார்" என்ற செந்தோழனின் கவிதையையும் தாங்கியவாறு இவ்விதழ் வெளிவந்துள்ளது.

(ஒ)

# குடாநாட்டின் 12 இடங்களில் மழைநீர் சேகரிப்புத் தாங்கிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

குடாநாட்டில் மழைநீரைச் சேகரிக்கும் வகையில் இலங்கை மழைநீர் பயன்பாட்டு ஒன்றியம் பன்னிரண்டு மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைக்கவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, அனலைதீவு, நெடுந்தீவு, சங்கானை, எழுவைதீவு, காரைநகர் ஆகிய பிரதேசங்களிலேயே இம்மழைநீர் சேகரிப்புத் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இம்மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பதற்கான பயிற்சிகள் கட்டடத் தொழிலாளருககு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 8ஆயிரம் லீற்றர் கொள்கலன் கொண்ட மழைநீர்த் தாங்கி ஒன்று திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மழைநீர்த் தாங்கிகள் அமைப்பதற்கான பயிற்சியை நிறைவு செய்த கட்டடத் தொழிலாளருக்கு சான்றிதழ்களும், மழைநீர் சேகரிப்புடன் தொடர்புபடுத்தி, மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் என்பனவும் நேற்று விவசாய பயிற்சி நிலையத்தின் மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இலங்கை மழைநீர் பயன்பாட்டு ஒன்றியத்தின் இணைப்பாளர் பி.எஸ்.ஏ.சுஜீத் சிரோமன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறு வனங்களின் இணையத்தலைவர் வி.சக்திவேல், நீர்ப்பாசன அபிவிருத்தி முகாமைத்துவ அதிகாரி எஸ்.சிறிஸ்கந்தராசா, விவசாய நிலைய உதவிப் பணிப்பாளர் சி.சின்னத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ-6)

## வழிகாட்டல் கருத்தரங்கு

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்திவந்த ஆசிரியர் ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிமுதல் 6மணி வரை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சையில் பங்குபற்றும் பரீட்சார்த்திகள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வடமராட்சி லயன்ஸ்கழகத்தின் செயலாளர் லயன் வி.எஸ்.சிவநாதன் கேட்டுள்ளார்.

(ஒ-6)

## விண்ணப்பம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர் தரத்திற்கு பதிலாள்களை நியமிப்பதற்கான விணணப்பப்படிவங்கள் பிரதேசெயலகத்தினால் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

# உடுவிலில் மாடுகளுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜூலை22

உடுவில் கால்நடை மருத்துவர் பிரிவில் மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்திலும் (இளந்தாரி கோயிலடி) - 29ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/189 கிராம சேவகர் பிரிவுக்கு காலை 9மணி தொடக்கம் 12மணிவரை இணுவில் சந்தையிலும் - உடுவில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியினால் மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோயத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன் இந்த நோய்க்கான தடுப்பூசியினை மாடுகளுக்கு ஏற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-204)


## துயர் பகிர்வு

எமது வித்தியாலயத்தைச் சேர்ந்த சக ஆசிரியை

**திருமதி பரமேஸ்வரி பரமேஸ்வரன்**

அவர்களது அன்புத் தாயார் இயற்கை எய்தியதையிட்டு கவலையடைகின்றோம். இவரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், ஊழியர்கள்.

யா/புற்றளை மகாவித்தியாலயம். புலோலி.

(C/36098)(43-17-26)

## விற்பனைக்கு

7½ Heavy உடைய China தயாரிப்பான (Water Cool Model) நல்ல நிலையில் உள்ள ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கி.ஜெயக்குமார்

றெஜின் வெல்டிங் வேக்ஸ்

டச்சு றோட், சாவகச்சேரி.

T.P.: 077 6016324.

(34368)

## கார் விற்பனைக்கு

13ஸ்ரீ தொடரிலக்கமுடைய Mitsubishi Mirage, box model, full A.C, Economic gear auto shutter நல்ல நிலைமையில் உடன்விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: T.K.Tourist Inn

பலாலி வீதி, கந்தர்மடச் சந்தி (அரசடிவீதி).

யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம்: 021-222-5660

(34366)(42)

## விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு:

விளம்பர இல:2331

மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(34367)

## யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிவிட்டது

Moon Beauty Care" நடத்துநரும் நடன ஆசிரியையுமானஆன B.அகிலாவின

**அழகுக்கலை வகுப்புகள்**

அடுத்த வகுப்பு 27.07.2004

காலை 10.30 மணி

★ ஒரு பிரிவுக்கான பதிவுகள் முடிவடைந்துவிட்டன.
★ அடுத்த பிரிவுக்கான பதிவுகளை23.07.2004 தொடக்கம் 27.07.2004 வரை தினமும் காலை 10-12 வரை இல.94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மேற்கொள்ளலாம்.
★ இருபிரிவுகளாக மாத்திரம் வகுப்புகள் நடத்தப்படும்.
★ பயிற்சி வழங்குவதற்கு இலகுவாக ஒரு பிரிவில் 10 மாணவிகள் மட்டும்.
★ Facials மட்டும் (12 வகை) பயில விரும்புவோரும் Facial செய்ய விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.
★ பருத்தித்துறையில் CME Tution Center இல், பதிவுகளை மேற்கொள்ளலாம்.
★ உடுப்பிட்டியில் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன (மியூ கொமினிக்கேசன், யூனியனடி)
★ அழகுக்கலை சிகிச்சை சம்பந்தமான ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0777-570138.

(34369)(34-19-26)



## நெஞ்சகலாத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 22.09.1942

உதிர்வு 22.06.2004

அமரர்

**இராசன் அண்ணாச்சாமி**

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (22.07.2004) வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கைபிடித்த காலம் முதல்
கனிவுடனே அன்பு செய்து
கணக்கிலாத செல்வம் நல்கி
கணத்திலெமை ஏன் அகன்றீர்?...

எங்கள் இல்லம் வளம்பெறவே
ஏற்ற நல்ல வழிகளெல்லாம்
எங்கள் தந்தை செயலதனில்
உறையவைத்து எமை வளர்த்தீர்!....

எமக்கினிய மொழியுரைத்து
எடுத்தணைத்து அன்பு நல்கி
தமதுயிரின் ஆழம் வரை
அன்புவைத்த அண்ணன் எங்கே?......

தவிக்குதைய்யா எம் இதயம்
உமைப்பிரிந்த நாள் முதலே
தரணிதனில் எமக்கு இனி
தக்க நல்ல உறவு ஏது?....

நாவலடி,
உடுப்பிட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்.

(C/34370)

யாழ்/கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்

## 41 ஆவது மாபெரும் விளையாட்டுப் போட்டி

காலம்: 24.07.2004 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு

1) சைக்கிள்றேஸ் 40 Km. (ஆண்கள்)

2) மரதன் றேஸ்(20 Km.) காலை 6.30 மணி (ஆண்கள்)

3) வினோதவுடைப்போட்டி பி.ப. 3.00 மணி (இருபாலாரும்)

போட்டியாளர்கள் எப்பிரதேசத்தில் இருந்தும் பங்கு பற்றலாம். பங்குபற்ற விரும்புவோர் அன்றையதினம் போட்டி ஆரம்ப நேரத்திற்கு முன்னதாக தே.அ.அட்டைகளுடன் வந்து பதிவினை மேற்கொண்டு பங்குகொள்ளலாம.

T.P:0777283588
(34382)(36-11-12)

யங்கம்பன்ஸ் வி.க
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை22

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திணைக்களத் தலைவர்கள் கூட்டுறவுப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்வர். (எ)


### தேவை

உணவுச்சாலையில் ரொட்டி தயாரிப்பவர், உணவு பரிமாறுவோர் உடன்தேவை. சம்பளம் பேசித்தீர்க்கப்படும். தங்குமிடவசதி, சாப்பாடு வழங்கப்படும்.

தொடர்பு:-
புளூராக்கன் ரெஸ்றோரன்ற்,
கண்டிவீதி,
சாவகச்சேரி. (சி-36301)

### மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு, உத்தரம் முதலாம் பாதம் பிறந்த விவசாயம் செய்யும் நற்பண்புள்ள மண மகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படம், குடும்பவிவரத்துடன் விணணப்பிக்கவும்.

வி.இல 2332 மே/பா உதயன்
திருமண சேவைகளும் விண்ணப்பிக்கலாம். (சி-36301)

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



மானஸ்தன்
புதிய நேரம்: 10.30,2.30,6.30,9.30.
(சி-35994)

நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்மியா, விஜயகுமார், கர்ணாஸ் நடித்த
குத்து
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/35739) (36)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், சுகன்யா, ரகுவரன் நடித்த
கேப்டன் (தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
Random Heargs இரவு 8.45 (பு.நே.)
(C-36291)(36)


## மரண அறிவித்தல்

### திருமதி உஷாதேவி திருவிளங்கம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருவிளங்கம் உஷாதேவி நேற்று (21.07.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் குமாரசாமி திருவிளங்கத்தின் (முன்னாள் தொழில் நுட்ப அலுவலர் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை, மகாவலித் திட்டம்), அன்பு மனைவியும், வாசுகி, வசுமதி (ஜேர்மனி), வாசுதேவன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கா.குமாரதாஸன் (செய்தி ஆசிரியர் - உதயன் நிறுவனம்), சோதிலிங்கம், அகிலன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கார்த்திகேசு (மலாயன் பென்ஸனியர்) மற்றும் செல்வராணி ஆகியோரின் மகளும் விமலாதேவி, கமலாதேவி, சுசீலாதேவி, வாமதேவன், தேவகி, காலஞ்சென்றவர்களான பரமதேவன், கெங்காதேவி ஆகியோரின் சகோதரியும் பொன்.வெற்றிவேலு (சட்டத்தரணி) , ஸ்ரீகாந்தா, காலஞ்சென்ற மகேந்கடமூர்த்தி ஆகியோரின் சகலையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 90, சட்டநாதர் வீதியில உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று, உடல் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலக்கம் 90,*
*சட்டநாதர் வீதி, நல்லூர்.*
*T.P:222 6043* (சி-36303)(36-11-12)

தகவல்:
கு.திருவிளங்கம்
(கணவர்).

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 22 |
| ௨ | ௨ |
| 04 | 06 |
| ௨ | ௨ |
| 1937 | 2004 |



திருமதி
### சிவக்கொழுந்து குணரத்தினம்

எமது அன்புத் தாய் இவ்வுலக வாழ்வினை நீக்கி இறைபதம் எய்திய செய்தி அறிந்து நேரில் வந்தோருக்கும் பத்திரிகை, தொலைபேசி, துண்டுப்பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (22.07.2004) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"கலாபவனம்"*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (34364)(36-11-12) - குடும்பத்தினர்.

## 3ஆம் மாத நினைவலையில்

| மலராய் | உதிர்வாய் |
|---|---|
| 20 | 24 |
| - | - |
| 11 | 04 |
| - | - |
| 48 | 04 |



எங்கள் அமரத்துவ ஜோதி
### இரத்தினம் குணேந்திரன்

ஆயிரத்தில் ஒரு மனிதர் நீர்
உலகம் அறிந்திடா ஒரு பிறவி நீர்
களங்கமில்லா வாழ்வு தீர்ந்த மதி நீர்
உம்மைக் காலமெல்லாம் பகைத்தறிந்த விதியோ
அரும்புக்குள்ளே இருந்த பூவையார் அறிந்தாரோ
ஆண்டவனும் குணேந்திரனை அறியவில்லையோ?
ஸிவர்க்க ஸாந்திபவ

இன்று (22.07.2004) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*223, கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.*

என்றும் நினைந்துருகும்:
குடும்பத்தினர்.

(34384)(36-11-12)



அனலையம்பதி - நயினாகுளம்
அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

ஐயன் மெய்யடியார்களே!

திருவருட்செல்வம் நிறைந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் தென்மேற்குப் பகுதியில் அனலையம்பதி எனும் திவ்விய க்ஷேத்திரத்தில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனாருக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் தாரண வருஷம் ஆடி மாதம் 7 ஆம் நாள் வியாழக் கிழமை (22.07.2004) இன்று நண்பகல் 12.00 மணியளவில் துவஜாரோகணமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. ஐயன் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு ஐயனின் அருள் பெறுவீகளாக.

### திருவிழா நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 22~7~2004 | வியாழக்கிழமை | - நண்பகல் 12.00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) |
| 27~7~2004 | செவ்வாய்க்கிழமை | - காலை கைலாசவாகனம் |
| 28~7~2004 | புதன்கிழமை | - மாலை வேட்டைத்திருவிழா |
| 29.7~2004 | வியாழக்கிழமை | - மாலை சப்பரத்திருவிழா |
| 30~7~2004 | வெள்ளிக்கிழமை | - காலை 10.00 மணிக்கு தேர்த்திருவிழா |
| 31~7~2004 | சனிக்கிழமை | - காலை தீர்த்தத்திருவிழா, மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்) |
| 01~8~2004 | ஞாயிற்றுக்கிழமை | .- மாலை திருக்கல்யாணம். |
| 02~8~2004 | திங்கட்கிழமை | - காலை பிராயச்சித்த அபிஷேகம், மாலை வைரவர் பொங்கல |

மஹோற்சவ பிரதமகுரு:

*'வேத சிவாகம ஜோதி'* **சிவஸ்ரீ வை.தியாகராஜக் குருக்கள்** - ஊரெழு

மங்கள வாத்தியம் : இணுவில் க.தயா குழுவினர்

ஐயனாரின் மஹோற்சவம் இனிது நிறைவுற மெய்யன்பர்கள் தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேகத்திரவியங்களை உரிய நேரத்திற்கு கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:-** விழாக்காலங்களில் காலை 9 மணிக்கு கண்ணகை அம்மன் கோயில துறை முகத்தில் இருந்து அனலைதீவிற்கும் பி.ப 2.00 மணிக்கு அனலைதீவிலிருந்து கண்ணகை அம்மன் கோயல் துறைமுகத்திற்கும் விஷேட படகுச் சேவை நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

அனாலைதீவு ஐயனார் ஆலயத்திற்கு நிதி உதவிகள் வழங்க விரும்பும் அடியார்கள் தங்களது நிதியுதவியை கீழ்க்காணும் வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு அனுப்பிவைக்கும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

பதினொரு தினங்களும் அன்னதானம் வழங்கப்படும்.

**ஐயனார் ஆலயப் பரிபாலனசபை,**
சேமிப்புக் க.கு. இல. 500-21-2005517-0 இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்.

அனலையம்பதி
(34383)(40-11-12-36)

- ஸ்ரீ பரிபாலன சபையினர்.
ஐயனார் திருக்கோயில், அனலைதீவு ~ 05.

## வலயக் கல்வி அலுவலகம், தீவகம்

### கேள்வி அறிவித்தல் - 2004

கீழே குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் கேள்விச்சபைத் தலைவரும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2004.08.05ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலைவிவரமும் | மீளளிக்கப்படாத கட்டணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|
| 01)யா/யாழ்ற்றன்கல்லூரி (மீள்கேள்வி) 35X25' வகுப்பறை அமைத்தல் 30X25' இருமாடிக்கட்டடம் மிகுதிவேலை | ரூ.500/- | ரூ.5000/- |
| 02)யாழ்.நெடுந்தீவு ம.வித்தி. பாடசாலைக்கட்டட திருத்த வேலைகள் | ரூ.250/- | ரூ.2200/- |
| 03)யா/சரவணை நகேஸ்வரி வித்தி. ஆரம்பக்கல்வி வகுப்பறை திருத்தவேலை | ரூ.250/- | ரூ700/-- |
| 04)யா/மண்டைதீவு றோ.க.த.க. பாடசாலை ஆரம்பக்கல்வி வகுப்பறை திருத்தவேலை | ரூ.250/- | ரூ.600/- |
| 05)யா/வேலணை சைவப்பிரகாச வித்தி. ஆரம்பக்கல்வி வகுப்பறை திருத்தி அமைத்தல் | ரூ.250/- | ரூ.600/- |
| 06)யா/சரவணை சின்னமடு வித்தி. ஆரம்பக்கல்வி வகுப்பறை திருத்தி அமைத்தல். | ரூ.250/- | ரூ.800/- |
| 07) யா/நெடுந்தீவு ம.வித்தி. மலசல கூட அமைப்பு -2 | ரூ.250/- | ரூ.1200/- |
| 08) யா/நெடுந்தீவு ம.வித்தி. விளையாட்டு மைதானம் புனரமைப்பு | ரூ.250/- | ரூ 650/- |

1) மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ICTDA) நிறுவனத்தில் தரம் 9 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்

2) பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தங்களால் இவ்வேலையை செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய மேற்குறிப்பிட்டவேலை செய்யு கேள்விப்பத்திரங்கள் பெற்று உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கவும். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு
   1) இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும் மீளளிக்கக் கூடிய மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டது.

3) கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படவேண்டும்.

4) மேற்படி கேள்விப்பத்திரம் சம்பந்தமான ஆவணங்கள், விவரங்கள் ஒப்பந்த நடைமுறைகள் என்பவற்றை மீளளிக்கப்படாத கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப்பணம் என்பனவற்றுடன் சேர்த்து வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம் என்ற பெயருக்கு காசுக்கட்டளை மூலம் செலுத்தி 2004.07.22 இருந்து2004.07.29 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

*பாடசாலை வேலைகள்,*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*தீவகம், வேலணை.* (36100)(36-11-12)

திரு.பொ.வேணுகோபால்
கேள்விச்சபைத் தலைவர்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தீவகம் , வேலணை.

# தேசியத்தை சீர்குலைக்கும் சக்திகளை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் தயார்

## மன்னாரில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர் குலைக்கும் தீய சக்திகளை எதிர்கொள்ள விடு தலைப் புலிகள் தயாராகவுள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

மன்னார் ஆண்டான்குளம் பாடசாலையில் நேற்று நடைபெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசதிணைக்கள அதிகாரிகளுட னான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது விடுதலைப் போராட்டம் கடந்த காலங் களில் பல துயரமான பாதைகளைக் கடந்து, இன்று ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒன்றி ணைந்து நிற்கும் ஒரு சூழ்நிலையை எட்டியுள்ளது.

தற்போதைய அமைதிச் சூழல் விடுதலைப புலிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் கார ணமாகவே ஏற்பட்டது. இதுவே, தமிழ் மக்க ளுக்கு ஒரு தலை நிமிர்வையும் அளித்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறாது விட்டிருந்தால் தமிழாகள் தமது இன அடை யாளத்தையே இழந்திருப்பார்கள்.

சிங்களப் பேரினவாதம் கடந்த காலத்தில் தமிழர் மீது பல்வேறு அடக்குமுறைகளைக் கட்ட விழ்த்திருந்ததுடன் போரையும் தொடுத்தது.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களை இந்த விடுதலைப்போராட்டத்தின் போது நாம் அர்ப்பணித்திருக்கின்றோம்.

தமிழினத்தை நிமிர வைத்த இந்த விடு தலைப் போராட்டத்தின்போது மன்னார் மாவட் டத்தைக் காப்பாற்றுவதற்காக எணணற்ற மாவீ ரர்கள் தமது உயிரைத்தியாகம் செய்துள்ளனர்.

இன்றைய அமைதிச்சூழலை தமக்கு சாத கமாகப் பயன்படுத்தும் சில தீயசக்திகள் எமது தாயகப்பிரதேசங்களுக்குள் ஊடுருவி எமது மக் கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயல் கின்றனர். ஆனால், இந்தத் தீயசக்திகளை எதிர் கொள்ளக்கூடிய வகையிலேயே விடுதலைப் புலிகள் உள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டுகால அமைதிச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசும், அதனுடன் இணைந்திருக்கும் தமிழ்த் தேசிய விரோத சக்திகளும் அமைதியைக் குழப்பி மக்க ளிடையே பிளவுகளை ஏற்படுத்தும் வகையி லேயே செயற்படுகின்றன. அரசின் இந்தப் போக்குப் பற்றி தமிழீழ விடுதல்லைப்புலிகளுக்கும் நன்கு தெரியும்.

அதேவேளை - அரசின் எந்த நடவடிக்கைக ளையும் எதிர்கொள்ளும் திறனுடனேயே விடுத லைப் புலிகளும் உள்ளனர். அத்துடன், மக்கள் பலமும் எமக்கு உள்ளது. எனவே, எமது மக்கள் இந்த தீய சக்திகளின் வதந்திகளை நம்பாது எமது போராட்டத்திற்கு தொடர்ந்தும் பக்கபல மாக நின்று இந்தச் சக்திகளை எதிர்கொண்டு எமது விடுதலையை விரைவில் வென்றெடுக்க திடசங்கற்பம் பூணுவோம் என்றார். (எ-8-7)

## பெண்களை அச்சுறுத்தி சங்கிலி திருடிய இளைஞன்

கொழும்பு,ஜூலை22

முன்னாள் பாடசாலை அதிபர் ஒருவரின் மகன் என்று கூறப்படும் ஓர் இளைஞனை கல் கிஸைப் பொலீஸார் கைதுசெய்து உள்ளனர். இந்த இளைஞரிடம் இருந்து நான்கு தங்க சங்கிலிகளையும் அவர்கள் கைப்பற்றியுள் ளனர்.

பிலியந்தலை, ரத்மலானை ஆகிய பகுதி களில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் களை தனியிடங்களில் வைத்து கத்தி முனை யில் அச்சுறுத்தி இவர் தங்கச் சங்கிலிகளையும் வேறுபொருள்களையும் அபகரித்து வந்துள்ளார் என்று தெரிகின்றது.

தாம் திருடிய பொருள்களை தெலவல என்ற இடத்திலுள்ள ஒருவர் மூலம் அடகு வைத்து அப்பணத்தை இருவரும் பகிர்ந்து கொண்டுவந துள்ளதும் பொலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர் தமது இரு சகோதரிகளில் ஒருவர் பொறி யியலாளர் என்றும் பொலீஸாரிடம் தெரிவித் துள்ளார். இந்நபர் போதைப்பொருளுக்கு அடி மையானவர் என்றும் தினமும் ஆயிரம் ரூபா வுக்கு மேல் போதைப்பொருளுக்காகச் செல வழிதது வந்தார் என்றும் பொலீஸார் கூறினர். இதற்கு முன்னரும் இவர் இம்மாதிரி குற்றங் களுக்காக விளக்கமறியலில் இருந்துள்ளார் என் றும் அவர்கள் தெரிவித்தனர். (ப)

## இலங்கை விவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படவேண்டும் என்று அவர்கள் விரும்பு கின்றார்கள்.

ராஜீவ் காந்தி அரசில் இடம்பெற்றிருந்த நட்வர்சிங் மீண்டும் வெளிவிவகார அமைச்சராகி உள்ளார். அப்போது இலங்கைக்கான தூதுவராக இருந்த ஜே.என்.டிக்ஸிற் இப்போது தேசிய பாது காப்பு ஆலோசகராகியிருக்கிறார்.

இலங்கை விடயத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டி அவசியம் இருப்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்று சிரேஷ்ட இந் திய அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

இலங்கை விடயத்தில் முற்றாக ஈடுபடு வதற்கு திட்டவட்டமான ஒரு யுக்தி அவசியம். நாங்கள் அதிகளவு ஊக்கம் காட்டவேண்டி இருக் கும் என்றும் அவர் சொன்னார்.

இலங்கையில் இனமோதல் மீண்டும் வெடிப் பதால் எழக்கூடிய அபாயத்துக்கும் அப்பால், அத்தீபகற்பத்தில் அமெரிக்க மற்றும் பாகிஸ் தான் உட்பட பலதரப்புகளின் செல்வாக்கு அதி கரித்து வருவது குறித்து இந்தியா தீவிர கவலை கொண்டுள்ளது.

பாகிஸ்தானும், இலங்கையும் சுதந்திர வர்த் தக உடன்பாடு ஒன்றுக்கு தயாராகி வருகின்றன. அத்தோடு அண்மைக்காலத்தில் பாகிஸ்தான் இலங்கைக்கு இராணுவ உதவிகளையும் வழங்கி வருகிறது.

இலங்கை தனக்குத் தேவையான பாதுகாப் புக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு பாகிஸ்தான் அண்மையில் ஒருகோடி அமெரிக்க டொலர் கடன்வசதியை வழங்கியிருக்கிறது. அத் தோடு, இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி களையும் பாகிஸ்தான் வழங்கியிருக்கிறது.

அமெரிக்காவும் இலங்கையில் தனது தலை யீட்டைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க உதவிகளை குறுகிய காலத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத் தும் திட்டங்கள் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் கிரிஸ்றினா றொக்கா வர்ணித்திருக்கிறார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் கதிர் வீச்சுப் பொருளகளின் சட்டவிரோதக் க... தல்களைத் தடுப்பதற்காக் பாரியதுறைகள் என்ற பெயரில் அமெரிக்கா முன்வைத்திருக்கும் வலைப்பின்னல் திட்டத்தில் இலங்கை பங்கு பற்றுவது தொடர்பாக நடைபெறும் பேச்சுக்களை இந்திய முகவர்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

சரித்திரபூர்வ மற்றும் இனத்துவக் காரணங்க ளுக்காக மட்டுமன்றி இலங்கைத் தீவு நிலை கொண்டுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையத்துக்காகவும், இயல்பாகவே இலங்கை யின் பங்காளியாகத் தொடர்ந்து விளங்க இந் தியா விரும்புகின்றது என இந்திய அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

இந்திய அமைதிப்படை இறுதியாக சுமார் இரண்டாயிரம் பேரின் இழப்போடு இலங்கைத் தீவை விட்டு வெளியேறிய 1987 - 90 களின் மோசமான அனுபவத்தின் பின்னர், இப்போதைய நிலைமைகளில் இலங்கையில் தனது இராணு வத்தை ஈடுபடுத்தும் எண்ணம் ஏதும் இந்தியா வுக்கு அடியோடு இல்லை. ஆனாலும் இராணுவ பொருள்களின் உதவியை இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு வழங்கும்.

எனினும் பழைய நாளகளை மீண்டும் கொண்டு வரும் வகையில் சகல வடிவங்களிலும் - ... யங்களிலும் - இலங்கையுடன் ஈடுபாடு காட்டப் படும் எனத் தற்போதைய இந்திய அரசின் அதி காரி ஒருவர் கூறினார்.

இப்படி 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித் துள்ளது. (க)

## சமாதானச் சூழல் இழுத்தடிக்க..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட சபை அமைக்கப்படும் என்றும் அம்மை யார் கூறியுள்ளார்.

அம்மையாரின் முன்னைய தீர்வுப்பொதி தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு எப்போதோ செத்துப் போய்விட்டது. பத்து வருடங்களின் பின் மீண்டும் அதற்கு உயிர் கொடுக்க அம்மை யார் முனைவது எந்தப் பயனையும் கொடுக்கமாட் டாது. ஏற்கனவே, இருக்கின்ற அமைப்பு முறையே சமாதானத்தை முன்நகர்த்த உதவாதபோது மேலும் ஒரு சபை என்ற கருத்து சலிப்பைத் தருவதாகவேயுள்ளது.

இதேவேளை, அம்மையாரின் ஆட்சிப் பங் காளிகளான ஜே.வி.பியினர் பேச்சு எப்படி நடத் தப்பட வேண்டும் என்றும் சிங்கள மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

இவையெல்லாம் தற்போதைய சமாதானச் சூழலுக்கு ஏற்புடைய விடயங்களல்ல. பேச்சை அரசு விரும்பவில்லை. பேச்சை நடத்தும் நிலை யில் அரசு இல்லை என்ற உண்மையைத்தான காட்டுகின்றன.

ஒரு கூட்டத்தில் சமாதானம் பற்றி அம்மையார் ஒரு கருத்தைக் கூறுகிறார். பின்னர் அதை அவரே மறுக்கின்றார். அம்மையார் கூறியதற்கு முரணாக ஜே.வி.பி. இன்னொரு கருத்தைக் கூறு கிறது. அதை அம்மையாரும் ஏற்றுக்கொண்டுள் ளார் என்று ஜே.வி.பி. கூறுகின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களை சபையைவிட்டு விரட்டியடிக்க வேணடும் என்று பச்சை இனவாதத்தை ஜே.வி.பி. தலைவரே கூறுகிறார்.

புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக நச்சுப்பிரசாரத்தை சிங்களப் பேரினவாத சக்திகள் வேகப்படுத்தி யுள்ளன.

ஜே.வி.பி. இதில் முன்னணி வகிக்கின்றது. சிங்கள ஊடகங்களும் தமது பங்கிற்கு இன வாதப்பணி செய்கின்றன.

கிராமங்கள் தோறும் ஜே.வி.பி. இந்த நச் சுப்பிரசாரத்தை தீவிரமாக செய்து வருகின்றது. சமாதான முயற்சிகள் தொடர்பாக புலிகளின் நிலைப்பாடுகள் எதையும் ஏற்க மறுத்துள்ள ஜே.வி.பி. இப்போதே போர்ப்பிரசாரங்களை ஆரம்பித்துவிட்டது. சந்திரிகா அம்மையாரும் தமது கட்சியின் நிலைப்பாட்டை நிராகரிக்க வில்லை என்று ஜே.வி.பி. கூறிவருகின்றது.

இத்தகைய சமாதான விரோதக் கருத்துக் கள் தமிழ் மக்களை விரக்தியின் விளிம்புக்குக் கொண்டு செல்கின்றன. சமாதான வழியில் தமி ழரின் இனபபிரச்சினை தீர்க்கப்பட முடியாத ஒன்று எனத் தமிழ் மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சைத் தட்டிக்கழிக்கும் அதே வேளை, சிங்கள அரசு தமிழ்த் தேசியத்தை சிதைக்க முனையும் அரசியல் சதிகளிலும் ஈடுபட்டுவருகின்றது. தனது இராணுவப் புலனாயவுப்பிரிவினரைப் பயன்படுத்தி கிழக்கில் கொலை களிலும் குழப்பத்தை உண்டு பண்ணும் செயல் களிலும் ஈடுபடுகின்றது.

இத்தகைய சதி அரசியல் மூலம் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தலாம் என்று சிங்கள அரசு நினைத்தால் அது பல வரலாற்றுப் பாடங் களை மறந்துவிட்டது என்பது தான் அர்த்தமா கும்.

துரோகங்களும், சதிகளும் புலிகள் இயக்கத தைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக பலப் படுத்தியுள்ள பல வரலாற்றுச் சம்பவங்களை எமது போராட்ட வாழ்க்கையில் காணலாம்.

சமாதானத்திற்குச் சாதகமாகவும் சிங்கள அரசு செயற்படவில்லை. போர் நிறுத்தத்தை யும் அது மதிக்கவில்லை. ஆனால், சமாதானச சூழல் நிலவுகின்றது என உலகிற்கு காட்ட விரும்புகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சமா தானமும் இல்லை; அபிவிருத்தியும் இல்லை; மீள்குடியமர்வும் இல்லை. அகதி வாழ்வும் தொலைநதபாடு இல்லை. நிகழ்கால நிம்மதியு மில்லை; எதிர்கால நம்பிக்கையும் இல்லை என்ற விரக்தி நிலையிலேயே உள்ளனர்.

தமிழ் மக்களின் இந்த அரசியல் மனநிலைக்கு மதிப்பளிக்கவேண்டிய நிர்பந்தம் புலிகள் இயக் கத்திற்கு உண்டு. போர்மூலம் தோற்கடிக்க முடியாது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சமாதானம் என்ற சதி அரசியல் மூலம் தோற் கடிக்க சிங்கள அரசு முயல்கின்றதோ! என்ற ஐயம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

காலம் கடந்தபடி உள்ளது. சமாதானத்திற் காகக் காத்திருக்க புலிகள் தயார். ஆனால், சிங்கள அரசு ஒரு சூழ்ச்சிகரமான நிகழ்ச்சி நிரலை வைத்துக்கொண்டு அதை நடைமுறைப படுத்துவதற்காக சமாதானச் சூழலை இழுத் தடிப்பதை உணர்ந்துகொண்டும் முட்டாள்தன மாகக் காத்திருக்க புலிகள் இயக்கம் தயார் இல்லை. அதை தமிழ் மக்களும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ் மக்களின் இந்த அரசியல் மனநிலையை சந்திரிகா அரசும் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளவேண்டும் என்று அதில் உள்ளது.

*(மற்றொரு செய்தி 14 ஆம் பக்கத்தில்)*(எ)

## ரி.பி.ஸி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விவகாரம் தொடர்பாக இலங்கை அர சின் சமாதானச் செயலகத்துடன் தொடர்புடைய உயரதிகாரி ஒருவர் ரி.பி.ஸிக்குப் பொறுப்பான ராமராஜன் என்பவரோடு தொடர்கொண்டு பேசி யிருக்கின்றார் எனத்தெரிகின்றது.

புலிகள் எதிர்ப்புப் பிரசாரத்தை ரி.பி.ஸி. தொடர்ந்து தீவிரமாகக் கடைப்பிடித்தால் இந்த ஒலிபரப்பு அஞ்சல் வசதியை ரி.பி.ஸி. இழக்க வேண்டிவரும் நிலை ஏற்படலாம் என அவர் மேலோட்டமாக ராமராஜனுக்குக் கோடிட்டுக் காட்டி யிருக்கிறார் எனத் தெரிவருகின்றது. (க)

## ஆலையடிவேம்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரும், யுத்தநிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் பிரதிநிதி ஜோன்ஸ் வாங்கும் சம்பவ இடத்திற்குச் சென்று துப்பாக்கிச் சூடு தொடர்பாக ஆராய்ந்தனர். அங்கு இரண்டு வெற் றுத் தோட்டாக்களும் கண்டெடுக்கப்பட்டன.

அக்கரைப்பற்றுப் பொலீஸார் புலன் விசார ணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் அம்பாறை மாவட்டப் பிரதி அமைப்பாளரான கமலன் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர் தலுக்காக - ஆலையடிவேம்பு பிரதேசசபைக்கு ஈ.பி.டி.பி. சார்பில் முதன்மை வேட்பாளராக நிறுத் தப்பட்டார்.

எனினும், அப்பிரதேசசபைக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த ஏனைய குழுக்களின் வேட்பு மனுப்பத்திரங் கள் நிராகரிக்கப்பட் டமையினால் தேர்தல் இன்றியே ஆலையடி வேம்புப் பிரதேச சபையின் நிர்வாகம் ஈ.பி.டி.பியைச் சென்ற டைநதது. அதன் பிரகாரம் கமலநாதன் அப்பிரதேச சபையின தலைவராக நியமிக கப்பட்டார்.

நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்ட கமலன் கல் முனையைப் பிறப் பிடமாகக் கொண்டவர். இரண்டு பிள்ளைக ளின் தந்தையாவார்.

இவருக்கு முன்பு ஆலையடிவேம்புப் பிரதேச சபையின் தலைவராகப் பணி யாற்றிய கேதீஸ் (ஈ.பி.டி.பி.) என்பவரும் சுடப்பட்டே மரணம டைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க-7-10-14)

## சங்குப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

கௌதாரிமுனை கிராம அபிவிருத்திக் குழுத் தலைவர் அப்பாத்துரை தலைமையில் நடந்த இந்தப் பேரணியின் முடிவில் பூநகரிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இந்தப் பேரணியில் பெருந்தொகையான மக்கள கலந்துகொண்டனர். (எ-8-7)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3, 4, 5, 6 ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZVRICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

Computer courses
Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
புதிய பிரிவு II
ஆரம்பம் 24.07.2004
மேலதிக விபரங்களுக்கு:-
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

ஆசிரியர் தெரிவுப் பரீட்சை
வே.தபேந்திரனின்
பொதுஅறிவு நடைமுறைவிடய கையேடு
விலை 35/= மீள் பதிப்பாக
சொற்ப பிரதிகள் வெளிவந்துள்ளன.
பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.
பரீட்சார்த்திகள் தந்த ஆதரவுக்கு
பலகோடி நன்றிகள்.
(34314)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை-2004
முந்நிலும் எதிர்பார்க்கையுடன்கூடிய
இறுதி மாதிரி வினாத்தாள் விடையுடன்
(உளச்சார்பு, பொது அறிவு)
ஆக்கம்: P.உமாசங்கர், P.கமல்தாசன்
இன்று வெளிவருகிறது. விலை 20/-
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-36096)(29)

## மரண அறிவித்தல்

### கபிரியேற்பிள்ளை ஆசீர்வாதம்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும்கொண்ட கபிரியேற்பிள்ளை ஆசீர்வாதம் அவர்கள் நேற்று (21.07.2004) புதன்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேற் பிள்ளை மரியம்மாவின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான பேதுறுப்பிள்ளை அன்னம்மா வின் அன்பு மருமகனும் அக்கினேசம்மாவின் அன் புக் கணவரும் மேரிமெற்றில்டா (கமலா -பிரான்ஸ்), மேரிறீற்றா (விமலா - பிரான்ஸ்), வின்சன்ற் (பாபு - சுவிஸ்), டொன் பொஸ்கோ (பாலா - லண்டன்), ஹென்றிஜெறாட் (குமார்) ஆகியோரின அன்புத் தகப்பனாரும் ஜீவறட்ணம், சிராணி, கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் டேமியன், சிந்துஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் அந்தோனிமுத்து, சூசைப்பிள்ளை, மரியாம்பிள்ளை, காலஞ்சென்ற அரியமலர், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.07.2004 சனிக்கிழமை முற்பகல் 9 மணிய ளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக கப்பட்டு, பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை வடக்கு,*
*பண்டத்தரிப்பு.*

(34385)(29-11-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.